# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5 இதழ் : 4 ஜூலை 2026










SREE VISALAM CHIT FUND LTD.


REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

**ஜூலை 2026**

மலர் : 5 இதழ் : 4

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534



கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நமது மின்னிதழின் 47வது இதழ் இது. நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம்வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள்!

பிப்ரவரி மாத இதழுக்கு பிறகு, இந்த ஜூலை இதழ் உங்கள் பார்வைக்கு. இந்த இடைவெளி ஒரு நிறுத்தம் அல்ல; அது ஒரு நிறைவான தயாரிப்புக்கான நேரம். இணையதள மேம்பாடு மற்றும் நிர்வாக மேம்பாட்டு பணிகளுக்கு இடையே, உங்களுக்கு இன்னும் சிறப்பான வாசிப்பு அனுபவத்தை தர வேண்டும் என்ற எண்ணமே எங்களை இயக்கியது.

உங்கள் காத்திருப்பிற்கும், தொடர் அன்பிற்கும் மனமார்ந்த நன்றி. இம்மாதம் தொடர்ந்து, மீண்டும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

ஆன்மிகம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் மற்றும் நிகழ்வுகள் என பன்முகப் பகிர்வாய் இந்த மலர் மிளிர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அந்த வகையில் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது.

இந்த இதழில் அனைவரது வாசிப்பிற்கு ஊக்கமளிக்கும் வண்ணம் பல்வேறு தலைப்புகளில் தேர்ந்தெடுக்கப் பட்ட படைப்புகள் அனைவரையும் கவரும் வகையில் இடம் பெற்றுள்ளன.

வாசகர்களாகிய உங்களில் பல சிறந்த படைப்பாளிகள் உள்ளனர். உங்களின் படைப்பாற்றலை உலகுக்கு தெரிவிக்க, எங்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக உங்கள் படைப்புக்களை எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் வரும் இதழ்களில் வெளியிடப்படும்.

வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது.

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். மேலும் இதழினை மெருகேற்ற மற்றும் வளர்ச்சிக்கு அனைவரது ஆலோசனைகளையும் , கருத்துக்களையும் வரவேற்கிறோம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சல் முகவரியில் அல்லது பின்வரும் பதிப்பாசிரியரின் வாட்சப் எண்ணில் (96590 32994) தொடர்பு கொள்ளவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!




அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
46/-
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :
96590 32994
எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்

SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just a single charge

LECTRIX



Book Your TEST DR!VE Now!!

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும் நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது. பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும் நமது மின்னிதழில் தங்கள் நிறுவனம் மற்றும் தங்கள் சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

**ஒரு பக்க விளம்பரத்திற்கான கட்டணம்- ருபாய்: ₹350/- மட்டுமே**

**ஓர் ஆண்டிற்கான (12 இதழ்கள்) விளம்பரத்திற்கான கட்டணம் – ருபயம்: ₹4000/- மட்டும**

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**குறைந்த செலவில் விளம்பரப்படுத்துங்கள்.**

**9659032994**

**naamnagarathar@outlook.com**

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- தர்மம் தலை காக்கும்! தக்க சமயத்தில் உயிர் காக்கும்! –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. ........ 14

**பண்பாடு**

- நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம்.... 22

**வர்த்தகம்**

- பசுமைத் தங்கம் அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் என்றால் என்ன? – கார்த்திக் முத்தப்பன் நகரத்தார் கேப்பிட்டல் ........ 33

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA ........ 46

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி........ 47

**கவிச்சோலை**

- வாகை சூடவா..!! –கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி. ........ 52
- தாய்மை –அரு.சிவகாமி இராமனாதன், ஒக்கூர்–நவிமும்பை. ........ 59

**சமையல்**

- அடுப்பில்லாமல் செய்யக்கூடிய பச்சப்புளி ரசம் ........ 53

**மொழி**

- வாங்க பேசலாம்..! – பேரா. கு. அன்புமெய்யப்பன் ........ 56

**சுயமுன்னேற்றம்**


- பூஜியத்தில் பிறந்து... மதிப்புடன் வாழ்வது எப்படி? ........ 60

**நிதி மேலாண்மை**

- பங்கு சந்தை ........ 63

**ஜோதிடம்**

- யாருககு மாப்பிள்ளை யாரோ!? –ஜோதிடர் எல்லி ........ 78




GET IT ON
Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

**TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.**

**VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,**

**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை – 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

**கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.**

**நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.**

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

**இதழில் விளம்பரம் செய்ய**
**கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.**

**96590 32994**

# இந்திய தொல்லியல் துறை

மற்றும்

## தமிழ்நாடு அரசு–இந்துசமய அறநிலையத்துறைக்குட்பட்ட

## அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருக்கோயில்

(முருகப்பெருமானுக்கு அமைந்த முதல் கற்றளிக்கோயில்)

கண்ணனூர், திருமயம் வட்டம்.

# ஆடிக் கிருத்திகை 2026

அனைவருக்கும் வணக்கம்.

1400 ஆண்டுகள் பழமை வாய்ந்ததும், சோழமன்னர்களால் கட்டப்பெற்று திருப்பணி செய்யப்பட்டது முருகனின் முதல்கற்றளிக் கோவிலான கண்ணனூர் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் திருக்கோயிலாகும்.

இங்கு வரும் ஆடிக்கிருத்திகை தினத்தன்று (07.08.2026 – வெள்ளிக் கிழமை) "கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் வழிபாட்டுக்குழு"வின் சார்பாக காலை 9.30 மணி அளவில் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யருக்கு சிறப்பு அபிஷேக வழிபாடு நடைபெறுகிறது. தொடர்ந்து சிறப்பு சந்தன காப்பு அலங்காரம் செய்விக்கப்பட்டு 12.15 மணிக்கு தீபாராதனை நடைபெற உள்ளது.

நிகழ்விற்கு அனைவரும் வருகைதந்து முருகப்பெருமானது அருளைப் பெற வேண்டுகிறோம்.

## கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் வழிபாட்டுக்குழு



# தர்மம் தலை காக்கும்!

## தக்க சமயத்தில் உயிர் காக்கும்!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.



1960களில் ஒரு திரைப்படப்பாடல் தமிழ்நாட்டு மக்களை தன் வயப்படுத்தியது. அந்தப்பாடலை எழுதியவர் கவியரசர் கண்ணதாசன் அவர்கள். அந்தப்பாடலின் சிலவரிகள் உங்களின் நினைவுக்காக இங்கே பதிவு செய்கிறேன்.

"தர்மம் தலைகாக்கும்! தக்க சமயத்தில் உயிர் காக்கும்! கூடஇருந்தே குழி பறித்தாலும், கொடுத்தது காத்துநிற்கும்! செய்த தர்மம் தலைகாக்கும்! அள்ளிக்கொடுத்து வாழ்பவன் நெஞ்சம் ஆனந்த பூந்தோப்பு! வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை! இது நான்குமறை தீர்ப்பு"

இந்தப்பாடல் வழி நாம் சிந்தித்தால் சில நல்லவர்களின் வாழ்க்கை வரலாறு சரியாக ஒத்துப் போகிறது. இன்றைய சமுதாயத்தில் தலைமுறை தலைமுறையாக தர்மம் செய்தோர்களின் குடும்பங்கள் ஏதோ சில காரணங்களால் வறுமையில் உழன்றாலும், அவர்களது தர்மத்தை போற்றும் விதமாக யாருமே அவர்களுக்கு உதவ முன் வருவதில்லை. மாறாக அவர்களைப் பற்றிய விமர்சனங்களை வாய்கூசாமல் பொது வெளியில் பரப்புகிறார்கள். இத்தகைய மனிதர்களின் வாழ்க்கை எப்படி முடியும்? என்பதை படைத்தவன் மட்டுமே அறிவான்.

ஒருவன் செய்த தர்மம், பின்னாளில் அவனது நாட்டையே காப்பாற்றியது என்று சொன்னால் நீங்கள் நம்ப மறுப்பீர்கள்.அது ஒரு நடந்த வரலாறு. அதைப் பற்றி சிந்திப்போம்.

1892 ஆம் ஆண்டு. அமெரிக்காவில் உள்ள ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவன் படித்தான்.அவனுக்குச் சொல்லிக்கொள்ளும் படியாக உற்றாரோ அல்லது உறவினரோ யாருமேயில்லை.

தன்னுடைய கல்லூரிப் படிப்பிற்கான கட்டணத்தை கட்டக்கூட அவனுக்கு சிறிதும் வசதியில்லை. நம்பிக்கை மட்டுமே அவனது மனதில் நிறைந்திருந்தது. தன்னுடைய படிப்பிற்கான தொகையை எப்படிக்கட்ட முடியும்? என்று இரவு முழுவதும் தன் நண்பனோடு கலந்து ஆலோசித்தான்.

இறுதியில் கல்லூரி அமைந்திருந்த நகரில், பிரபல இசைக் கலைஞர் ஒருவரைக்கொண்டு "இசை நிகழ்ச்சி"ஒன்றை நடத்துவது என்றும், அதற்கு நுழைவுக் கட்டணச்சீட்டு விற்பனை செய்வதின் மூலம் வசூலாகும் தொகையில்,நிகழ்ச்சி நடத்தும் செலவு போக மீதமுள்ள தொகையைக் கொண்டு, தங்களது கல்லூரிக் கட்டணத்தை கட்டிவிடுவது என்றும் முடிவு செய்து அதற்கான வேலைகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

உலகம் முழுவதும் புகழ் பெற்று விளங்கிய போலந்து நாட்டை சேர்ந்த பிரபல பியானோ இசைக்கலைஞர் "இக்னேஸி ஜே.பேட்ரெவ்ஸ்கியைச்" சந்தித்து இசைக்கச்சேரிக்குத் தேதி கேட்டார்கள்.



அவரது மேலாளரோ, சார் இசைக்கச்சேரி செய்ய வருவார்.அதற்காக அவருக்கு நீங்கள் கட்டணமாக $2000 தரவேண்டும்"என்றார். மேலாளர் சொன்னதைக் கேட்டு, எந்த விதமான சலனமும் காட்டாமல், தங்களிடம் பணமே இல்லை என்பதையும் கூறாமல், " சரி" என்று ஒத்துக்கொண்டு வந்து விட்டனர்.

பிரபல பாடகர் பேட்ரெவ்ஸ்கி வருவதாகச்சொன்னதே, தங்களுக்கு மிகப்பெரிய வெற்றி என நினைத்து, கச்சேரியை நடத்த,இருவரும் அல்லும் பகலுமாக நிகழ்ச்சிக்காக திட்டமிட்டு உழைத்தார்கள்.

பிரபல பாடகர் பேட்ரெவ்ஸ்கி வருவதாகச்சொன்னதே, தங்களுக்கு மிகப்பெரிய வெற்றி என நினைத்து, கச்சேரியை நடத்த, இருவரும் அல்லும் பகலுமாக நிகழ்ச்சிக்காக திட்டமிட்டு உழைத்தார்கள்.

இசைக்கச்சேரிக்கான நாளும் வந்தது.பிரபல பாடகரும் போலந்தில் இருந்து வந்து விட்டார். அமெரிக்காவில் அந்த நாளில் எதிர்பாராத விதமாக, அதே நகரில் வேறு சில முக்கிய நிகழ்வுகள் நடைபெற்ற காரணத்தால், இரு மாணவர்களும் எதிர்பார்த்தபடி இசைக்கச்சேரிக்கான டிக்கெட்டுகள் விற்பனை யாகவில்லை. ஆகையால் அரங்கம் நிரம்பவில்லை. அரும்பாடுபட்டு விழாவை ஏற்பாடு செய்த இருவருக்கும் என்ன செய்வது?என்று புரியவில்லை.

இருவரும் மனதை திடப்படுத்திக்கொண்டு பிரபல பாடகர் பேட்ரெவ்ஸ்கியை சந்தித்து நடந்ததைக்கூறி, இசைக் கச்சேரியை ரத்து செய்து விடலாம் என்றார்கள்.

இதைக்கேட்ட, பிரபல பாடகர் பேட்ரெவ்ஸ்கி மறுத்து விடுகிறார். "நான் திட்டமிட்டபடி இசைக் கச்சேரியை நடத்துவேன் என்றார். ஒரு வழியாக இசைநிகழ்ச்சி முடிந்த பின்னர் அவரைச் சந்தித்த மாணவர்கள், அவரிடம் $1600 கொடுத்து, இது தான் மொத்தம் வசூலான தொகை மீதியுள்ள தொகைக்கு பின் தேதியிட்டு செக் ஒன்றைத் தங்களுக்கு நாங்கள் கொடுத்து விடுகிறோம் என்று பணிவாகச் சொன்னார்கள்.

பிரபல பாடகர் பேட்ரெவ்ஸ்கி அவர்கள் தான் வாங்கிய காசோலையை கிழித்துப் போட்டார். இருவரும் கொடுத்த தொகையை அவர்களிடமே கொடுத்து "நீங்கள் எனக்கு தர வேண்டிய கட்டணத்தையும் தரவேண்டாம். அதை நான் தள்ளுபடி செய்கிறேன். இந்தப்பணத்தை வைத்துக் கொண்டு உங்கள் படிப்புக்கான கட்டணத்தை கட்டுங்கள்! என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டார். அவர்கள் இருவரும் கண்கள் கலங்கியபடி அவருக்கு நன்றி சொன்னார்கள்.



இசை நிகழ்ச்சி நடைபெற்ற அரங்கத்திற்குக்கூட வாடகை கொடுக்க கூடவசதியற்ற அந்த மாணவர்கள் சிரமப்பட்டனார். அதனைத் தன் மேலாளர் மூலம் அறிந்த கொண்ட பேட்ரெவ்ஸ்கி அந்தத் தொகையையும் இறுதியில் தானே செலுத்தி விட்டார்.

பேட்ரெவ்ஸ்கி மிகப் பெரிய செல்வந்தர். அவரை பொறுத்தவரை அது ஒரு சாதாரணத்தொகை தான். ஆனால் அவருக்குள் இருந்த மனிதாபி மானத்தை அந்தச்சம்பவம் உலகுக்கு உணர்த்தியது.

பேட்ரெவ்ஸ்கி மிகப் பெரிய செல்வந்தர். அவரை பொறுத்தவரை அது ஒரு சாதாரணத்தொகை தான். ஆனால் அவருக்குள் இருந்த மனிதாபி மானத்தை அந்தச்சம்பவம் உலகுக்கு உணர்த்தியது.

ஆனால் பேட்ரெவ்ஸ்கி, நான் உதவாவிட்டால் இவர்களுக்கு வேறு யார் உதவுவார்கள்? இவர்களுக்கு உதவுவதால் நாமொன்றும் குறைந்து போகப் போவதில்லை, என்று கருதியே அந்த உதவியைச் செய்தார். பல ஆண்டுகள் உருண்டோதியது. பேட்ரெவ்ஸ்கி காலப் போக்கில் மேலும் புகழின் உச்சிக்குச் சென்று ஒரு கட்டத்தில் போலந்து நாட்டின் பிரதம மந்திரியாகவே ஆகிவிட்டார்.

மிகப் பெரும் தலைவராக விளங்கி நல்லாட்சி நடத்தி வந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக முதல் உலகப் போர் துவங்கிய காலகட்டம் அது. போலந்து நாடு போரின் பிடியில் சிக்கி,சின்னா பின்னமானது. போர் முடிவுக்கு வரும் தருவாயில் மக்கள் அனைத்தையும் இழந்து வறுமையில் உழன்றனர். எங்கும் பஞ்சம் தலை விரித்தாடியது.



1918 ஆம் ஆண்டு, எப்படி இந்த நிலைமையை சமாளிப்பது? பசியோடிருக்கும் தன் லட்சக்கணக்கான மக்களுக்காக யாரிடம் போய் உதவி கேட்பது? கலங்கித் தவிக்கிறார் பேட்ரெவ்ஸ்கி.

கடைசியில் அமெரிக்கா வின் ஆபத்துக்கால உதவிக்குழு அராவை அணுகுகிறார். (American Relief Administration)( ARA) அதன் தலைவராக இருந்தவர் ஹெர்பெர்ட் ஹூவர் என்பவர்.இவர் பின்னாளில் அமெரிக்கா வின் 31 வது ஜனாதிபதியானார்.



பேட்ரெவ்ஸ்கி கேட்டுக் கொண்டதையடுத்து அமெரிக்காவின் உதவிக்கரம் போலந்துக்கு நீள அடுத்த சில நாட்களில் அமெரிக்காவிலிருந்து போலந்து நாட்டிற்கு ஆயிரக்கணக்கான டன்கள் உணவுத்தானியங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அனுப்பப் பட்டன.அதன் மூலம் சுமார் 1.5 மில்லியன் போலந்து மக்கள் பசியாறினர்.ஒரு பேரழிவு மற்றும் பஞ்சத்திலிருந்து போலந்து மக்கள் தப்பினர். பேட்ரெவ்ஸ்கி நிம்மதி பெருமூச்சுவிட்டார்.

தான் கேட்டவுடன் தன் மக்களுக்கு உணவு பொருட்களை டன் கணக்கில் அனுப்பி அவர்களை பட்டினி சாவிலிருந்து காப்பாற்றிய அமெரிக்காவின் ஆபத்துக்கால உதவிக் குழுவின் (American Relief Administration) தலைவரை நேரில் சந்தித்து நன்றி சொல்ல விரும்பினார் பேட்ரெவ்ஸ்கி. ஹெர்பெர்ட் ஹூவரை நேரில் சந்தித்து கண்கள் பணிக்க நன்றி தெரிவிக்கிறார்.

நோ!நோ! மிஸ்டர் ப்ரைம் மினிஸ்டர். நீங்கள் நன்றி சொல்லக்கூடாது நீங்கள் செய்த உதவியைத்தான் நான் உங்களுக்குத் திருப்பிச்செய்தேன். உங்களுக்கு நினைவிருக் கிறதா? என்று எனக்குத் தெரியவில்லை. கிட்டதிட்ட 2 5 ஆண்டுகளுக்கு முன்பு இங்கே கல்லூரி மாணவர்கள் இருவருக்கு அவர்கள் ஃபீஸ் கட்ட உங்கள் நிகழ்ச்சியை இலவசமாக நடத்திக் கொடுத்து உதவினீர்கள் அல்லவா?அந்த மாணவர்களில் ஒருவன் தான் நான் என்கிறார் ஹெர்பெர்ட் ஹூவர்




பேட்ரெவ்ஸ்கி கண்கள் கலங்கியபடி அவரை அணைத்துக்கொள்கிறார்.காலம் எப்போது யாரை எங்கு வைக்கும்? என்று ஒருவராலும் இங்கே சொல்லவும் முடியாது, கணிக்கவும் முடியாது. தனிப்பட்ட ஒருவருக்கு செய்த உதவி, எப்படி ஒரு நாட்டிற்கே பன் மடங்கு திரும்ப கிடைத்தது? என்பதைச்சிந்தித்தால், நாம் செய்த தர்மம் நம் தலை காக்கும்" என்பதைப் புரிந்து கொள்ள முடியும் தானே?



இந்த உலகில் நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதைப் பன்மடங்கு அறுவடை செய்வீர்கள் என்று நம்புங்கள்! ஏனெனில் விதைத்தவன் உறங்கினாலும், ஏன் அந்தப் படைத்தவனே உறங்கினாலும், விதைகள் ஒருநாளும் உறங்குவதில்லை! பலன் கருதாமல் பேட்ரெவ்ஸ்கி செய்த உதவி இது. ஆனால் காலத்தினால் செய்த உதவியாயிற்றே!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! என்ன சரிதானே?

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON
Google Play

# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

1983-2026 44TH ANNIVERSARY

Our Culture is Financial Discipline.
Money is Easier when your
Proactive Plan with
Nithyakalyani Chit Funds...




## OUR BRANCHES

| | |
|---|---|
| Madurai Main 98430 93250 | Arasaradi / Mdu 73391 25777 |
| Dindigul 98432 91652 | Erode 75581 99888 |
| AnnaNagar / Mdu 98432 91653 | Aruppukkottai 73589 91777 |
| Trichy 98432 91654 | Thirunagar / Mdu 84899 10191 |
| Reserveline / Mdu 98430 93256 | Srivilliputhur 70944 61192 |
| Coimbatore 82200 52338 | Pollachi 70923 00882 |

Call : 0452-2692680, 9786300304 / E.Mail : sncfco@gmail.com





முனைவர்
நா.வள்ளி சொக்கலிங்கம்
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

# சைவ சமய வரலாற்றைக் கட்டமைத்தலில் நகரத்தாரின் பங்கும் பணியும்





சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட நகரத்தார்கள் தமிழகத்தில் சுமார் ஓர் இலட்சம் மக்கட்தொகையைக் கொண்ட சிறுபான்மைச் சமூகத்தினராவர். சைவ சமய வரலாற்றில் இவர்களுக்குக் கணிசமான பங்குண்டு. 'சிவ மதத்திலேயே இருக்கிறது' என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடப்பிடித்த நகரத்தார்கள் ஒன்பது சிவன் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். "கோயில் சார்ந்த குடிகள்" என்று நகரத்தார்களைப் பாராட்டுவார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை, பர்மா (மியான்மர்), மலேயா, வங்காளம், தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேஷியா, மொரிஷியஸ் முதலிய தெற்காசிய கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று பஞ்சு, அரிசி, மிளகு, துணி முதலிய வணிகத்தொழிலில் ஈடுபட்ட நகரத்தார்கள், பிறகு 'கொடுக்கல் வாங்கல்' எனப்படும் வட்டித் தொழிலில் ஈடுபட்டனர். தாங்கள் தொழில் நிமித்தம் சென்ற நாடுகளையும் வளப்படுத்தித் தாங்களும் பெரும்பொருள் ஈட்டினர்.

போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத அக்காலத்தில் நகரத்தார்கள் தங்கள் உறவினர்களிடம் வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு அதாவது தாங்கள் உயிரோடு இருக்கும்போதே இறந்தவர்களுக்குச் செய்கின்ற சடங்குகளைச் செய்துகொண்டு உயிரைப் பணயம் வைத்துப் பாய்மரக் கப்பல்களில் துணிவோடு பயணம் செய்து திரைகடலோடித் திரவியம் தேடினர். 'செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்ற நம்பிக்கையோடு பயணம் செய்தனர். இடுப்பு வேட்டியில் சிறு முருகன் சிலையை மடித்து வைத்துக் கொண்டு போகும் இடமெல்லாம் கொண்டு சென்றிருக்கின்றனர்.

"காற்றினிலே பாய்போட்டுக்
கடவுளையே துணை வைத்துக்
கடலோடி மலைநாடும் பிறநாடும்
சென்றார்கள் கப்பல் வாராத போதே"

என்ற கண்ணதாசன் வரிகளும் இதை நினைவுபடுத்தும்.



இவ்வாறு அயல்நாடுகளில் தொழில் புரிந்து பெரும்பொருள் ஈட்டிய நகரத்தார்கள் ஈட்டியதில் ஒரு பகுதியை 'மகமைப் பணம்' என எடுத்து வைத்து தர்மம் செய்தனர். நகரத்தார்களது ஐந்தொகைப் பேரேட்டில் 'தருமக் கணக்கு' என்றே ஒரு பகுதி இருக்கும். அந்தப் பணத்தையும் வட்டித் தொழிலால் வளர்த்து உள்நாட்டிலும் தாங்கள் தொழில் புரிந்த வெளிநாடுகளிலும் காலத்திற்கேற்ப பலவிதமான அறப்பணிகளைச் செய்தார்கள். குறிப்பாகச் சமயத் திருப்பணிகளை விரும்பி மேற்கொண்டனர்.

முடிமன்னர் ஆட்சிக்குப்பிறகு ஐரோப்பியர் ஆட்சியில் இந்து சமயத்தின் தூண்களாக விளங்குகின்ற ஆலயங்கள் பாழடைந்து பேணுவாரின்றி இருந்தன. கி.பி.18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கிறித்தவ, முகம்மதிய சமயங்கள் ஏற்றம் கண்டதாலும், இந்திய மன்னர்கள் ஆற்றல் இழந்து அயல் சமயத்தின் படைத்துணையை நாடி ஓடியதாலும் நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. இக்காரணங்களால் தமிழகத்தில் பெருமை வாய்ந்த பழங்கோயில்கள் போர் அணிகள் நிறுத்தப்பட்டிருந்த பாடிவீடுகளாகவும் கொத்தளங்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

சிதம்பரம் கோயிலில் சாஹுஜி என்ற மராத்தியன் பகைவருக்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான். பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலக் கிழக்கிந்தியக்கம்பெனியாரும், ஐதரலியும் மாறிமாறி இக்கோ யிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக்கோயில் தொடர்ந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக இராணுவத்தினர் வசம் இருந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயிலின் சுற்றாலைகளும், சிற்றாலயங்களும் இடியுண்டு அழிந்தன. ஒருமுறை நடராஜர் சிவகாமசுந்தரி திருவுருவச் சிலைகளை அந்நியருக்குப் பயந்து எடுத்துச் சென்று திருவாரூர்க் கோயிலில் சபாபதி மண்டபத்தில் வைத்திருந்து சிதம்பரம் கோயில் ராணுவத்திடமிருந்து விடுதலையான பிறகு மீண்டும் அங்கே கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.1

'சிதம்பரம் கோயிலைப் போலவே திருவண்ணாமலைக் கோயிலிலும் படைவீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. பல கொலைகள் அக்கோ யிலுக்குள் நடைபெற்றன. ஒருமுறை ஆர்க்காட்டு நவாபு ராஜாசாயுபு விட்டுவிட்டுப் போன பட்டாளம் ஒன்று அண்ணாமலையார் கோயிலினுள் தங்கியிருந்தது. தியாகதுர்க்கம் கின்னேதாரன் கிருஷ்ணராவு என்ற மராத்தியன் ஒருநாள் திடீரென்று தன் படைவீரருடன் கோ யிலுக்குள் புகுந்து எழுநூற்று ஐம்பது சிப்பாய்களைப் படுகொலை செய்து கோயில் சுற்றாலைகளை இரத்தத்தால் மெழுகினான் என்ற

நெஞ்சம் பதை பதைக்க வைக்கும் செய்தியை அறிகிறோம்.

2, இவ்வாறு அநேக பாடல்பெற்ற தலங்கள் காலத்தின் கோலத்தால் சீரழிந்து வருவாயின்றைப் பூசை முதலியன நடைபெறாமல் இருந்தன. பூசனை தவறினால் வரும் தீங்கினை

"கண்ணுதற் பெருமான் மேய கோயிலில் காலந்தோறும்
நண்ணுதற் பூசையாதி விதிப்படி நடத்தல் வேண்டும்
பண்ணுதல் தவறுமாயின் பார்த்திபன் தனக்கும் பாரில்
அண்ணுபல் லுயிர்க்கும் தீமை அணுகுதல் சரதமாமே"

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூறுவார்.

3, சிவத்தலங்களைத் திருப்பணி செய்து பூசைகள் முட்டுப்பாடின்றி நடைபெற வேண்டும் என்று நினைத்த நகரத்தார்கள் வசதி வாய்ப்புகள் இருந்த காரணத்தாலும் இயல்பாகவே ஆழ்ந்த சைவப்பற்று உடையவர்களாக இருந்ததாலும் பல தலங்களைக் குறிப்பாகப் பாடல்பெற்ற தலங்களைத் தேடித்தேடிச் சென்று திருப்பணிகள் செய்தனர். தொழில்துறை காரணமாகச் சென்ற நாடுகளிலும் ஆலயங்களை நிறுவி அங்கெல்லாம் சைவத்தையும் தமிழையும் திராவிட சிற்பக்கலை மரபையும் நிலைநாட்டினர்.

தாங்கள் திருப்பணி செய்த கோயில்களில் வழிபாடுகள் சிறப்புற நடைபெறுவதற்காகவும் கோயிலுக்கு வழிபடவரும் அடியார்களின் நலன் கருதியும் வழிவகைகள் செய்தனர். கோயில்களையொட்டி நந்தவனங்கள், சத்திரங்கள், நகரவிடுதிகள், ஊருணிகள், தேவார, திருவாசக, திருப்புகழ்ப் பாடசாலைகள், வேதபாட சாலைகள், ஆகம பாடசாலைகள், பசுமடங்கள், அன்னதான மடங்கள், அறுபத்துமூவர் மடங்கள் என்ற பல்வகை அமைப்புக்களை ஏற்படுத்தினர். மடங்களைப் பொறுத்தவரையில், மேலே கூறிய மடங்களோடு திருவாசக மடம், திருமந்திர மடம், திருப்புகழ் மடம், ஏகாதசி மடம், கார்த்திகை மடம், சனி மடம், சாதுக்கள் மடம், ஞானியார் மடம், இராக்கால மடம், விபூதி மடம், குங்கிலிய மடம், பன்னீர் மடம், கஞ்சி மடம், ஊறுகாய் மடம், சமயதீட்சைக்கான மடங்கள்,

வேதாந்த மடங்கள் போன்ற பல்வகை மடங்களையும் ஏற்படுத்தினர். கோயில்களில் வௌவால்கள் வந்து அடையாதபடி ஈச்சங் குருத்துகளைக் கொண்டு வந்து கட்டுவதற்காக வலையர் இனத்தாருக்கு 'வௌ்ளவாலடி மானியம் என்ற பெயரில் நிலங்களைத் தானமாக் கொடுத்துள்ளனர்'.

4, திருப்பெருந்துறையுறைச் சிவனுக்கு நிவேதனமாகப் படைக்கப்படும் புழுங்கலரிசி வெண்சோற்றைப் பிரசாதமாகப் பெற்றுச் செல்லும் அடியவர்களுக்கு உதவியாக 'உப்புமடம்' 'ஊறுகாய் மடம்' என்ற இரண்டு மடங்கள் திருப்பெருந்துறையில் தேவகோட்டை நகரத்தாரால் ஏற்படுத்தப்பட்டன. இம்மடங்களைக் குறித்து தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் 'கண்டதும் கேட்டதும்' என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்'5.

5, பாடல் பெற்ற தலங்களைத் தேடித்தேடித் திருப்பணி செய்தமைக்குச் சான்றாகத் திருக்கொள்ளம்புதூர் திருப்பணியைக் கூறலாம். புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள நச்சாந்துப்பட்டியைச் சேர்ந்த பெ.ராம.ராமன் செட்டியார் என்பவர் கோயில் திருப்பணி செய்ய நினைத்துத் திருத்தலங்களைத் தேர்வு செய்து கொண்டிருந்தார். (இவரது குடும்பத்தினர்தான் மலேயாவில் முதன்முதலாக இரப்பர் பயிரிட்டவர்கள்)

6, புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த பேரையூர் நாகநாதசுவாமி கோயிலைத் திருப்பணி செய்யப் புதுக்கோட்டை மன்னர் இசைவு வழங்கியிருந்த போதிலும் அது பாடல் பெற்ற தலமாக இல்லையே என்று தயங்கிப் பிறகு ஞானசம்பந்தர் 'கொட்டமே கமழும்' என்று தொடங்கும் பதிகம் பாடி ஓடம் போக்கிய தலமான 'திருக்கொள்ளம்புதூர்' என்ற சோழநாட்டுத் திருத்தலம்

திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதை அறிந்து அவ்வாலயத் திருப்பணியை மேற்கொண்டார். அவ்வாறு திருப்பணி செய்யும்போது தஞ்சை மாவட்டத்தில் கருங்கற்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் பட்டிமலைக்குப்பம், திருவண்ணாமலை, வடமதுரை, குளத்தூர், திருமெய்யம் ஆகிய ஊர்களிலிருந்து கற்கள் சென்றன. பெரிய பெரிய கற்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் கொரடாச்சேரியிலுள்ள வெட்டாற்றுப் பாலம் (திருக்கொள்ளம்புதூருக்கு அருகிலுள்ளது) சேதமடையும் எனப் பொதுப்பணித் துறையினர் தடை செய்தனர். அப்போது ராமன் செட்டியார், அவ்வாறு சேதம் ஏற்பட்டால் அப்பாலத்தைச் சரிசெய்ய ஏற்படும் செலவைத் தாங்களே ஏற்றுக்கொள்ளுவதாகப் பொதுப்பணித் துறையினருடன் உடன்படிக்கை செய்துகொண்டு கருங்கற்களை வரவழைத்துத் திருப்பணிகளைச் செய்து முடித்தார்.

7, சில சமயங்களில் பொதுமக்கள் தங்கள் ஊர்களிலுள்ள புராதனக் கோயில்களைத் திருப்பணி செய்யுமாறு வேண்டிக்கொண்டபோது நகரத்தார்கள் திருப்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள். சென்னைக்கு அருகே திருவள்ளூருக்கு மேற்கே சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திருவெண்பாக்கம் என்ற தலம். சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்பாக்கத்தை அடைந்து சிவபெருமானை வணங்கித் 'திருக்கோயில் உள்ளீரே' என்று விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து 'உளோம் போகீர்' என்று சொல்லி அனுப்பிய தலம் அது. இத்தலத்திலுள்ள கோயில், கள்ளி முளைத்துப் பாழடைந்து வழிபாடு நடைபெறாமல் இருந்தது. இக்கோயிலைத் திருப்பணி செய்யவேண்டும் என்று 1916இல் ஊர்மக்கள் வேண்டுகோள் விடுக்க, நகரத்தார்கள் திருப்பணி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

8, உறையூரில் உள்ள திருமூக்கீசுவரம் என்ற பாடல்பெற்ற தலத்தைத் திருப்பணி செய்ய முயன்ற உறையூர்வாசிகள் பணம் போதாமையால் தேவகோட்டை வந்து நகரத்தார்களை வேண்டிக்கொள்ள தேவகோட்டை நகரத்தார்கள் திருப்பணியை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். 1901 இல் பாடப்பட்ட 'தன வணிகர் குல சிரேஷ்டர்களாகிய நகரத்தார் பேரில் நவரத்தினம்' என்ற நூல்,

"சீர்பெருகு ஒற்றியூர் கச்சி கழுகாசலம்
தில்லை சீர்காழி வைய்யித்
தீசர் உறுகோவில் திருவதிகை அருணாசலம்
திகழ்கும்பகோணம் மதுரை
பார்பெருகு வெங்காடு செங்காடு மாயூரம்
பரங்கிரி கன்னியாவும் முன்னாள்
பாண்டிசோழன் ஆதி மன்னரால் கட்டிட்ட
பகரறிய திவ்ய தேசம்
ஏர்பெறு மடம் தடம் சோலைகள் முதலான

யாவையும் நவமாக்கியவர்கள்" நகரத்தார்கள் என்கிறது. ஒவ்வொரு கோவிலுக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு சுமார் இருநூறு பாடல்பெற்ற தலங்களைக் கல்திருப்பணிகளாகச் செய்திருக்கிறார்கள் அவர்கள்.

### மடங்கள்:

சைவம் தழைக்கப் பாடுபட்ட செயற்கரிய செயல்கள் செய்த அறுபத்து மூன்று நாயன்மார்கள் மீதும், குறிப்பாக சைவசமயக் குரவர்கள் நால்வர்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நகரத்தார்கள் அவர்களைத் தங்கள் குருவாக ஏற்றுக்கொண்டனர்.

அவர்களைப்போற்றி வழிபடுமுகமாகவும், அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளை வளர்க்குமுகமாகவும் அறுபத்து மூவர் மடங்களையும், குருபூஜை மடங்களையும் ஆங்காங்கு நிறுவினார். அம்மடங்களில் நாயன்மார் திருமேனிகளை எழுந்தருளுவித்தனர். நாயன்மார்கள் பிறந்த நட்சத்திரத்தன்று, அபிடேக ஆராதனைகள் செய்து வணங்கினர். மேலும் நாயன்மார் புராணம் சைவத் திருமுறைகள் ஆகியவற்றைப் படித்தும் படிப்பித்தும் வந்தனர். பின்பு, "பரமனடியாரானார்கள் எல்லாம் எய்தி உண்க" வென இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்ட' அப்பரடிகள் போல பொதுநோக்காகச் சிவனடியார் எல்லோருக்கும் அன்னமிட்டனர்.

சுமார் இருபது தலங்களில் குருபூஜை மடங்களும், மதுரை, காரைக்குடி, ஆத்தங்குடி, காளையார் கோயில் ஆகிய ஊர்களில் அறுபத்து மூவர் மடங்களும் நிறுவியுள்ளனர். காரைக்குடியில் உள்ள அறுபத்துமூவர் மடத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சொக்கலிங்க அய்யா என்ற பெரும்புலவர் சைவ சித்தாந்தப்பாடம் கற்பித்து வந்தார். சிதம்பரத்தில் சைவசித்தாந்தப் பாடசாலை ஒன்றையும் ஏற்படுத்தினார்.

திருப்பெருந்துறை, காரைக்குடி, பலவான்குடி ஆகிய ஊர்களில் திருவாசக மடங்களை நகரத்தார்கள் நிறுவினர். திருப்பெருந்துறை திருவாசக மடத்தில் ஏழை எளிய மாணவர்களுக்கு தேவார, திருவாசகங்களை இசையுடன் பயிற்றுவித்தனர். பலவான்குடியில் 'சிவநேசன்' என்ற பெயரில் அச்சு இயந்திரசாலை ஒன்றை ஏற்படுத்தி 'சிவநேசன்' என்ற இதழை வெளியிட்டனர். அந்த இதழ் சைவசமயம் தொடர்பான செய்திகளைத் தாங்கி வந்தது. திருமந்திரத்தின் பெயரால் 'திருமந்திர மடம்' ஒன்றைக் காளையார்கோயிலில் ஏற்படுத்தி, திருமூலர் நாளன்று சிறப்பு வழிபாடுகள் செய்யவும்,

திருமந்திரப் பாராயணம் செய்யவும் வழிவகைகள் செய்தனர்.

காசி போன்ற வட இந்தியத் தலங்களிலும், கிழக்காசிய நாடுகளிலும் நகரத்தாரின் சைவ சமயப்பணி குறிப்பிடத்தக்கது.

9, நகரத்தார்களைப் பற்றி ஆராய்ந்துள்ள டாக்டர் பிலிப் சீகல்மேன் என்ற அமெரிக்க அறிஞர், "பொதுவாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாகச் சோழநாட்டிலும் இன்றுநாம் காணும் சிறந்த கோயில்களை வாழவைப்பவர்கள் நகரத்தார்களே. காவிரி பாயும் வளமான பகுதிகளில் நிலங்கள் வாங்கி இக்கோயில்களுக்குச் செல்வம் சேர்த்திருக்கிறார்கள். கோயில் நிலங்களைப் பாதுகாப்பதிலும், கோயில் நிதிகளை பலமடங்காகப் பெருக்குவதிலும் நகரத்தார்களுக்கு இருக்கும் திறமை ஈடு இணை இல்லாதது. ஊதுபத்தியானது தன்னைப் பொசுக்கிக்கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பதுபோல நகரத்தார்கள் எத்துணையோ இடையூறுகளைத் தாங்கியும் இன்னல்களைச் சமாளித்தும் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டும், தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை உள்ளபடி சொன்னாலும் கற்பனை போலவே தோன்றும். என்று கூறுவது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

## அடிக்குறிப்புகள்

1. கே.கே.பிள்ளை; 'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை 1981 பக்கம் 450 451
2. மேலது
3. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'தனியூர்ப் புராணம்' உ.வே.சா பதிப்பு. பாடல் எண் 13, பக்கம் 23.

4. நா.வள்ளி, 'நகரத்தாரின் அறப்பணிகள்' – கிருஷ்ணா பதிப்பகம்.

5. மேலது


6. பெ.ராம.குடும்பத்திற்குச் சொந்தமான பேரையூர் அம்பாள் குளம் ஸ்ரீ பொய்யாத விநாயகர் மஹா கும்பாபிஷேக மலர் 31.01.1975

7. எல்.சோமு, சித நடராசன் 'பெ.ராம.குடும்பத் திருப்பணிகள்' 'கல் திருப்பணியின் கவின்மிகு வரலாறு' – கட்டுரை

8. திருவெண்பாக்கவாலய ஜீரணோத்தாரணம் – திருவள்ளூர்வாசிகளால் வெளியிடப்பட்டது. 1916

9. சோமலெ, 'அலைகடலுக்கு அப்பாலும் ஆலயப்பணிகள்,சோமு நூலக வெள்யீடு நகரத்தார்களின் 1979 பக்கம் 16.

– தொடரும்



நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App


இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON
Google Play

# பசுமைத் தங்கம் அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் என்றால் என்ன?



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்



உலகளவில் தற்போதைய சந்தையில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் (Rising Technologies) மற்றும் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் போக்குகள், தொழில்துறைகள் அனைத்திலும் நிலைத்தன்மை (Sustainability), சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளங்களின் பொறுப்பான பயன்பாடு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றன. அந்த மாற்றத்தின் தாக்கம் தங்கம் மற்றும் நகைத்துறையிலும் தெளிவாகக் காணப்படுகிறது. இதன் விளைவாக, 'பசுமைத் தங்கம்' அல்லது 'மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம்' என்ற கருத்து உலகளவில் பரவலாக பேசப்பட்டு, அதன் அவசியம் மற்றும் தாக்கம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

நகைத்துறையில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு செயலூக்கமான கருவியாக பசுமைத் தங்கத்தைக் காணலாம். இதன் மூலம், ஒரு விலைமதிப்புள்ள பொருளின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை மற்றொன்றுடன் ஒப்பிட்டு, தொடர்ந்து சீர்தூக்கிப் பார்க்கலாம்.

நகைகளை மாற்றத்திற்கான ஒரு செயலூக்குமான கருவியாகக் காணலாம், அதன் காரணமாக, ஒரு விலைமதிப்புள்ள பொருளின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை மற்றொன்றுடன் ஒப்பிட்டு, தொடர்ந்து சீர்தூக்கிப் பார்க்கலாம். நமக்குக் கிடைக்கும் மலிவான மற்றும் மிகவும் பொதுவான தீர்வுகளில் ஒன்று மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் ஆகும். ஆனால், சமீபத்திய ஆண்டுகளில் மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் ஒரு பசுமைப் பூச்சு சாதனமாக மாறியுள்ளது என்பது இரகசியமல்ல. சிலர் இதை 'பொறுப்பான, சுற்றுச்சூழலுக்கு உகந்த, பூஜ்ஜிய கார்பன், மோதல் இல்லாத மற்றும் நெறிமுறை சார்ந்த நடைமுறைகளைக் கோருவதற்கான ஒரு சர்வ நோய்க்கும் மருந்தான தீர்வு' என்று பயன்படுத்துகின்றனர்.

[பொறுப்பான சுரங்கத்திற்கான கூட்டணி] மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம், புதிதாக வெட்டி எடுக்கப்பட்ட உலோகத்திற்கு ஒரு எளிதில் கிடைக்கக்கூடிய, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாக இருக்கக்கூடிய அதன் முழுத் திறனையும் தற்போது பூர்த்தி செய்யவில்லை. ஏன் என்பதையும்,தொழில் துறை எவ்வாறு வீழ்ச்சியடைய வேண்டும் என்று விரும்புகிறோம் என்பதையும் ஆராய்வதே இந்த பதிவு இடுகை.

அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான நகை பிராண்டுகள், மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்தை தற்போதைய காலநிலை நெருக்கடிக்கு ஒரு குறிப்பிடத்தக்க தீர்வாக விளம்பரப்படுத்துகின்றன; அவற்றில் சில, அது 'பூமியைக் காப்பாற்றுகிறது' என்றும் கூறுகின்றன.

'மறுசுழற்சி செய்வது பூமிக்கு நல்லது, குப்பைக் கிடங்குகளில் குவிந்து கிடக்கும் கழிவுகளைக் குறைக்கிறது, மேலும் வளங்களின் பயன்பாட்டையும் குறைக்கிறது என்பதை குழந்தைகள் சிறு வயதிலிருந்தே கற்றுக்கொள்கிறார்கள்,' என்று ஆய்வாளர்கள் விளக்குகிறார்கள்.

பாரம்பரிய தங்கச் சுரங்கத்துடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்துக் கவலைப்படும் நுகர்வோரைக் கவரும் வகையில், இந்தச் செய்தி எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. தங்கம் என்பது மீண்டும் மீண்டும் எளிதில் உருக்கிச் சுத்திகரிக்கப் படக்கூடிய, என்றென்றும் புதுப்பிக்கத்தக்க ஒரு வளம் என்பதால், தங்கத்தை மீண்டும் பயன்படுத்துவது உண்மையில் பல நூற்றாண்டுகளாக ஒரு பொதுவான நடைமுறையாக இருந்து வருகிறது என்பதைப் பலர் விவாதிப்பதில்லை. தங்கத்தை மறுசுழற்சி செய்வது ஒன்றும் புதிதல்ல; மேலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கான ஒரே அணுகுமுறையாகக் கருதிப் பாராட்டப்பட வேண்டிய ஒரு நடைமுறையும் நிச்சயமாக அல்ல.

புதிதாக வெட்டி எடுக்கப்பட்ட தங்கத்தை விட, மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் தொழில்நுட்ப ரீதியாக சுற்றுச்சூழலில் குறைவான பாதிப்பையே ஏற்படுத்துகிறது என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம். வெட்டி எடுக்கப்பட்ட 1 கிராம் தங்கம் 36,410 கிராம் பசுமை இல்ல வாயுக்களை வெளியிடும் நிலையில், அதற்கு இணையான மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் வெறும் 53 கிராம் வாயுக்களை மட்டுமே வெளியிடுகிறது. வேறுவிதமாகக் கூறினால், காற்றில் வெளியிடப்படும் கார்பன் டை ஆக்சைடின் அளவு 686 மடங்கு – அதாவது 99.8% குறைவு.

உள்ளூர் தங்கம் – அதாவது, இங்கிலாந்தில் மறுசுழற்சி செய்யப்பட்டு விற்கப்படும் தங்கம் – உலகெங்கிலும் அனுப்பப்படும் தங்கத்தை விட சுற்றுச்சூழலில் மேலும் குறைவான பாதிப்பையே ஏற்படுத்துகிறது என்பதையும் நினைவில் கொள்வது அவசியம்.

இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் புவி வெப்பமயமாதலுக்கு ஒருபோதும் முழுமையான தீர்வாக இருந்ததில்லை. பதிலீட்டு விளைவு – அதாவது, ஒரு முதன்மை வளத்திற்குப் பதிலாக இரண்டாம் நிலை வளம் இடம்பெயர்வதால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் – தங்கத்திற்கு ஒரு பசுமையான மற்றும் கரியமிலமற்ற நன்மையை நியாயப்படுத்த முடியாது. நகைகள் முதல் மருத்துவம், வாகனத் தொழில் மற்றும் தொழில்நுட்பம் வரை பல்வேறு தொழில்களில் தங்கத்திற்கு அதிக தேவை இருப்பது மட்டுமல்லாமல், தங்கம் அதன் மதிப்புக்காகச் சுரங்கங்களில் இருந்து எடுக்கப்படுகிறது மற்றும் ஒரு நாணயமாகவும் பங்கு வகிக்கிறது. மற்ற உலோகங்கள் அல்லது பொருட்களைப் போலல்லாமல், மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் அதிக அளவில் கிடைப்பது தங்கச் சுரங்கத் தொழிலைத் தடுக்காது. உண்மையில், 2018 மற்றும் 2021–க்கு இடையில் சுத்திகரிக்கப்பட்ட "மறுசுழற்சி" தங்கத்தின் அளவு 34% அதிகரித்துள்ளது என்றும், அதே நேரத்தில் இந்த நான்கு ஆண்டுகளில் சுரங்க உற்பத்தி ஆதாரம்

நிலையானதாகவே இருந்தது என்றும் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.



'மறுசுழற்சி செய்யப்பட்ட' தங்கத்தைப் பெறுவதற்கான பல்வேறு தொழில் திட்டங்களின் உரிய விடாமுயற்சித் தேவைகள், தரப்படுத்தப்பட்ட தணிக்கை அமைப்பு ஏதுமின்றி, தற்போது மிகவும் பலவீனமாக உள்ளன. இது, சிக்கலான தங்கம் சட்டப்பூர்வமான விநியோகச் சங்கிலிகளுக்குள் நுழைவதற்கு வழிவகுக்கும் குறைபாடுகளை உருவாக்குகிறது; அதாவது, மோதல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், பணமோசடி, வரி ஏய்ப்பு, தொழில்துறை அளவிலான சுரங்கம், குழந்தைத் தொழிலாளர் மற்றும் தடைசெய்யப்பட்ட தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுடன் தொடர்புடைய தங்கம்.

சிறந்த நடைமுறைத் தரங்களுக்குச் சான்றளிக்கப்பட்ட சுத்திகரிப்பு ஆலைகள், மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்திற்கான தங்கள் உரிய விடாமுயற்சியை முதல் விநியோகஸ்தர் வரை மட்டுமே மேற்கொள்கின்றன என்றும், இந்தத் தங்கம் எங்கிருந்து மீண்டும் சந்தைக்குள் நுழைந்தது மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்து என்ன என்பதை அறியாமலேயே இதைச் செய்கின்றன என்றும் ஆய்வுகள் காட்டுகிறது. இது, சந்தேகத்திற்குரிய மூலங்கள் களங்கப்பட்ட தங்கத்தை எளிதாக விற்பனை செய்வதற்கும், சுத்திகரிப்பாளர்கள் அதை 'மறுசுழற்சி செய்யப்பட்டது' என்று மறுபெயரிடுவதற்கும் வழிவகுக்கிறது.

இந்தப் பிரச்சனைக்கான தீர்வு இருமுனை கொண்டது.

தொழில் திட்டங்கள், மறுபயன்பாடு செய்யப்பட்ட மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்திற்கான தங்கள் உரிய விடாமுயற்சித் தேவைகளைக் கடுமையாக்க வேண்டும், மேலும் அனைத்து நிறுவனங்களும் தங்கள் 'மறுசுழற்சி செய்யப்பட்ட' தங்கத்தின் மூலத்தை முழுமையாகச் சரிபார்க்க வேண்டும்.

அவ்வாறு செய்வதற்கு, 'மறுசுழற்சி செய்யப்பட்ட' தங்கம் என்பது முதலிலேயே சரியாக என்ன என்பதைப் பற்றிய ஒரு தெளிவான, உலகளாவிய வரையறை நமக்கு முதலில் தேவை. இந்த விஷயத்தை நாம் அடுத்து ஆராய்வோம்.

'மறுசுழற்சி' என்பது எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்ற கேள்விக்கு விடை காண்பது கடினமாக இருக்கலாம், ஏனெனில் நகைத்தொழில் இன்னும் ஒருமித்த கருத்தை உருவாக்க முயன்று வருகிறது. இந்த வரையறைகளைப் பயன்படுத்துபவர்கள் எந்த அளவிற்கு அவற்றுக்குப் பொறுப்புடையவர்களாக இருக்க முடியும்? உதாரணமாக, இது சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தும், ஒரு தரநிலையால் கட்டாயப்படுத்தப்பட்ட, அல்லது கூட்டாக ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறையா? பொதுவாக, மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் என்பது முன்னர் சுத்திகரிக்கப்பட்ட தங்கம் எனப் புரிந்துகொள்ளப்படலாம்.

தற்போதுள்ள வரையறைகளின்படி, நுகர்வோரிடம் இதுவரை சென்றிராத, புதிதாக வெட்டி எடுக்கப்பட்ட தங்கத்தை மாற்றுவதன் மூலம் மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் "செயற்கையாக உருவாக்கப்படுகிறது" என்று ஆய்வுகள் குறிப்பிடுகிறது. அதன்படி, அவர்கள் மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் மற்றும் மறுபயன்பாட்டுத் தங்கம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு வேறுபாட்டை உருவாக்குகிறார்கள்.

அவர்களின் வரையறைகளின்படி, மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் என்பது, எடையில் 2%–க்கும் குறைவான தங்கத்தைக் கொண்ட, நிராகரிக்கப்பட வேண்டிய எந்தவொரு பொருளிலிருந்தும் மீட்கப்பட்டு, ஒரு புதிய வாழ்க்கைச் சுழற்சியைத் தொடங்குவதற்காக ஒரு சுத்திகரிப்பாளருக்கோ அல்லது பிற கீழ்நிலை இடைநிலைச் செயலாக்கிக்கோ திருப்பி அனுப்பப்படுகிறது. அதே சமயம், மறுபயன்பாட்டுத் தங்கம் என்பது, எடையில் 2%–க்கும் அதிகமான

தங்கத்தைக் கொண்ட எந்தவொரு பொருளின் நிலையை மாற்றும் எளிய நோக்கத்துடன் அதிலிருந்து தயாரிக்கப்படுகிறது (எ.கா. நகைகளை உருவாக்க உருக்கப்படும் தங்கக் கட்டிகள், சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படும் கட்டியாக உருக்கப்படும் நகைகள், விற்கப்படாத, பயன்படுத்தப்பட்ட அல்லது உடைந்த நகைகளை உருக்கிப் புதியதாக ஒன்றை உருவாக்குதல், உற்பத்தி கழிவுகள் போன்றவை).

ஜுவல்லரி ப்ராஜெக்ட், நுகர்வோர் பயன்பாட்டிற்குப் பிந்தைய மறுசுழற்சி ('பயன்படுத்தப்பட்ட நுகர்வோர் பொருட்களிலிருந்து உலோகங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் போன்ற பொருட்களை மீட்டு, புதிய பொருட்களில் மீண்டும் பயன்படுத்துதல்') மற்றும் நுகர்வோர் பயன்பாட்டிற்கு முந்தைய மறுசுழற்சி ('உற்பத்தியின்போது மீட்கப்பட்ட துணைப் பொருட்கள் அல்லது புழக்கத்தில் இல்லாத நுகர்வோர் பொருட்களிலிருந்து மீட்கப்பட்டு, புதிய பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள்') ஆகியவற்றுக்கு இடையே வேறுபடுத்துகிறது. 'மறுசுழற்சி செய்யப்பட்ட' தங்கம் குறித்து பொதுவான வரையறையின்படி, 'மறுசுழற்சி செய்யப்படாத எந்தவொரு உலோகம் அல்லது உற்பத்தித் துணைப் பொருளைக் கொண்ட கட்டிகள், அதே உற்பத்தி வரிசையில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டால், அவை மறுசுழற்சி செய்யப்படுவதில்லை.'

இதற்கிடையில், ஒரு பொருள் 'பயன்படுத்தப்பட்டாலோ, மீண்டும் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது மீட்டெடுக்கப்பட்டாலோ' அது மறுசுழற்சி செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன்மூலம், நகை தயாரிப்பாளர்களின் தரைகள் அல்லது மேசைகளிலிருந்து கூட்டி எடுக்கப்பட்ட தங்கம் அல்லது பழைய பல் அடைப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட தங்கம் என, மீட்கப்பட்ட எந்தவொரு தங்கத்தையும் 'மறுசுழற்சி செய்யப்பட்டதாக'க் கருதலாம்.

இது போன்ற வரையறைகளின்படி, சுரங்கத்திலிருந்து மறுசுழற்சி செய்யப்படும் மூலப்பொருளுக்கு மிகக் குறுகிய பயணத்தைக் கொண்ட ஒரு பொருளையும் 'மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம்' என்று கருத வாய்ப்புள்ளது. "தங்கம் ஒரு நாள் அல்லது 50 ஆண்டுகள் வங்கியில் இருக்கலாம், ஆனால் அது விற்கப்பட்டவுடன், அதன் உரிமையாளர் மாறிய ஒரே காரணத்திற்காக 'மறுசுழற்சி செய்யப்பட்டது' என்று முத்திரை குத்தப்படுகிறது."

'மறுசுழற்சி செய்யப்பட்ட' தங்கம் என்பதன் வரையறையானது, பொதுவாக மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களுக்கான சட்ட மற்றும் நெறிமுறை வரையறைகளுக்கு இணங்க, நுகர்வோர் பயன்பாட்டிற்குப் பிந்தைய கழிவுகளை மட்டுமே உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பெரும்பாலான தங்கம் வர்த்தகம் செய்யப்படும் அல்லது சுத்திகரிக்கப்படும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இங்கிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவை, கழிவுப் பொருட்களை மறுபயன்பாடு செய்வதை மறுசுழற்சி என்றும், பின்னர் நிராகரிக்கப்பட்ட பொருட்களைக் கழிவு என்றும் வரையறுக்கின்றன. அமெரிக்காவோ, இல்லையெனில் குப்பையாக வீசப்படும் பொருட்களைப் பதப்படுத்துவதை மறுசுழற்சி என்று வரையறுக்கிறது.

இந்தச் சட்ட மற்றும் ஒழுங்குமுறை வரையறைகளின்படி, ஒரு பழைய நகை, ஒரு நாணயம் அல்லது கட்டி, அல்லது ஒரு உற்பத்தித் துணைப் பொருள் ஆகியவற்றைக் கழிவாகக் கருத முடியாது. ஏனெனில், அவை நிராகரிக்கப்படவோ அல்லது குப்பையில் வீசப்படவோ விதிக்கப்பட்ட ஒன்றல்ல. தங்க நகைகள் நிறைந்த குப்பைக் கிடங்குகளை நாம் பார்ப்பதில்லை. அப்படியிருக்க, உண்மையில் மாசுபடுத்தும் குப்பையாக மாறியிருக்கக்கூடிய மறுசுழற்சி செய்யப்பட்ட நெகிழிப் புட்டிகளைப் போலவே, ஒரு பழைய நகை அல்லது உற்பத்திக் கழிவுகளைத்

தூய தங்கமாக மாற்றி, உடனடியாக ஒரு பசுமைப் பிம்பம் மற்றும் பூஜ்ஜிய கார்பன் தடம் என்ற நன்மையையும் எப்படிப் பெற முடிகிறது?

இந்த வரையறையை உறுதிப்படுத்துவது, உலகம் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சனைகளான, உலகெங்கிலும் முறையான மின்னணுக் கழிவு மறுசுழற்சி வசதிகள் இல்லாதது போன்றவற்றில் நமது மறுசுழற்சி முயற்சிகளைக் குவிக்க உதவும்.

மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்தின் சிக்கல்: அது மட்டும் பாதிப் பிரச்சினையை மட்டுமே தீர்க்கிறது.

நாம் உலகைப் பொருளாதார கண்ணோட்டத்தின் வழியாகப் பார்க்கிறோம்; இது சமூகத்தின் சமூகப் பொருளாதாரத் தேவைகளையும், நாம் அனைவரும் சார்ந்திருக்கும் நமது கிரகத்தின் இயற்கைச் சூழல் அமைப்புகளின் எல்லைகளையும் ஒரே நேரத்தில் கருத்தில் கொள்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில், மீட்கப்பட்ட பொருட்களைக் கொண்டு மட்டுமே வேலை செய்வது, சுரங்கத் தொழிலை நம்பி வாழும் உலகெங்கிலும் உள்ள 10 கோடி மக்களைப் புறக்கணிப்பதாகும். சமீபத்திய தசாப்தங்களில் தங்கத்தின் விலை உயர்ந்துள்ளதால், கைவினை மற்றும் சிறு அளவிலான சுரங்கத் துறையும் விரிவடைந்துள்ளது.

தங்கத்தின் விலை அதிகமாக இருக்கும் வரை, உள்ளூர் சமூகங்களால் செய்யப்படும் தங்கச் சுரங்கம் நிறுத்தப்படும் என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை.

"சிறு அளவிலான சுரங்கத் தொழில் விநியோகச் சங்கிலிகளைத் துண்டிப்பது அல்லது 'மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம்' என்ற போர்வையில் அவற்றை மறைப்பது, விநியோகச் சங்கிலிகளுக்குள் முறைசாராத் தன்மையை நிலை நிறுத்துகிறது," என்று விளக்குகிறது.

முறைசாராத் தன்மை இல்லாததால், சுரங்கத் தொழிலாளர்களும் அவர்களது சமூகத்தினரும் நியாயமற்ற விலைகள், பாதுகாப்பற்ற பணிச்சூழல்கள், சுரண்டல் மற்றும் மோதல் குழுக்களுடன் தொடர்பு கொள்ளுதல் போன்ற பெரும் அபாயங்களுக்கு உள்ளாகின்றனர். "சிறு அளவிலான சுரங்கத் தொழிலுடன் ஈடுபடாமல் இருப்பது, தங்க விநியோகச் சங்கிலிகள் ஒரு உண்மையான நேர்மறையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், சமூகங்கள் தங்கள் கனிம வளங்களிலிருந்து நேரடியாகப் பயனடைவதை உறுதி செய்வதற்கும் கிடைக்கக்கூடிய மிகப்பெரிய தவறவிடப்பட்ட வாய்ப்பாகும்."




நகை வியாபாரிகள், தங்களின் செயல்பாடுகளின் பரந்த தன்மையை ஒரு சமநிலைப்படுத்தும் செயலாகக் கருதி எடுத்துக்கொள்ளவேண்டும். மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்தில் மட்டுமே பிரத்தியேகமாக ஈடுபடுவது என்பது, பிற சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளைப் போல் புறக்கணிக்காது, நகைத்தொழில்துறை அங்கீகரிக்க வேண்டும்.

முன்மொழிவு:

மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்திற்கான ஒரு அடுக்கு முறை



மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்தை கவனமாகப் புரிந்துகொண்டு, விவரித்து, பயன்படுத்தும்போது, அது பழையவற்றிலிருந்து புதியவற்றை உருவாக்கும் ஒரு வாய்ப்பாகும்; மேலும் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு முனைப்புடன் பங்களிக்காமல் அழகான நகைகளை அணிந்து மகிழ இது உதவுகிறது.

மீண்டும் பயன்படுத்துவதும் மறுசுழற்சி செய்வதும் மிகவும் அர்த்த முள்ளதாகும், ஏனெனில் அவை உயிரியல் ரீதியாக சிதைவடையாது" என்று நீடித்த நிலைத்தன்மைக்கான ஆராய்ச்சியாளரும் ஆய்வாளரும் விளக்குகிறார்கள்.

"மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இதுவரை வெட்டி எடுக்கப்பட்ட தங்கம் அனைத்தும் இன்னும் பூமிக்கு மேலே நம்முடன் இருக்கிறது என்பதை நிரூபிக்கும் ஆய்வுகள் பெருகி வருகின்றன. நாம் நூற்றுக்கணக்கான மற்றும் ஆயிரக்கணக்கான டன் தங்கத்தைப் பற்றி பேசுகிறோம். இந்த மூலப்பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பை நான் காண்கிறேன், ஏனெனில் அவற்றின் செயல்திறனை ஒருபோதும் பாதிக்காமல், அவற்றை மீண்டும் மீண்டும் வார்க்கவும் உருக்கவும் முடியும் என்ற சிறந்த பண்புகள் அவற்றுக்கு உள்ளன."

ஆனால், இந்த வாய்ப்பை நாம் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் நமது பூமிக்கு எந்த அளவிற்கு உண்மையாகப் பயனளிக்கும் என்பதில் அதன் தோற்றம் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது என்பதை உணர்ந்து, அதனை நுணுக்கமாக விவாதிக்க வேண்டும். பரஸ்பர புரிதலுக்காக, மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கத்திற்கு மூன்று அடுக்கு வகைப்பாட்டுத் திட்டத்தை பரிந்துரைக்கபடுகிறது:

## உள்ளூர் மறுசுழற்சி தங்கம் | படிநிலை 1
## "கழிவுத் தங்கம்"

- நுகர்வோர் பயன்பாட்டிற்குப் பிறகு, அப்புறப்படுத்தப்பட அல்லது குப்பையில் வீசப்பட வேண்டிய கழிவுகளிலிருந்து பிரத்தியேகமாகப் பெறப்பட்டது.

- மருத்துவம், ஆபரணம் மற்றும் தொழில்நுட்பத் தொழில்களில் தங்கம் ஏற்கனவே கூறுகளாக மாற்றப்பட்டு, பின்னர் உடைந்த மற்றும் காலாவதியான பாகங்களிலிருந்து அந்தக் கூறுகள் பிரித்தெடுக்கப்படும் கழிவுகள்.

- உள்ளூர் சேகரிப்பிலிருந்து; மறுசுழற்சி செய்யப்பட்டு இங்கிலாந்தில் விற்கப்படுகிறது.
- முழுமையான மூலத்தைக் குறிப்பிடும் ஆவணங்களுடன், தடமறியக்கூடிய மற்றும் சான்றளிக்கக்கூடியது.

## மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் | படிநிலை 2
## "வட்ட வடிவ தங்கம்"

- மறுபயன்பாடு செய்யப்பட்ட அல்லது மறுவடிவமைக்கப்பட்ட குடும்பப் பாரம்பரிய நகைகள்.

- மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கக் கட்டிகள்.
- தங்கம் வாங்கு' திட்டங்களில் வாங்கப்பட்ட பழைய தங்கம்.
- முழுமையான மூலத்தைக் குறிப்பிடும் ஆவணங்களுடன், தடமறியக்கூடியவை.

### மறுசுழற்சி செய்யப்பட்ட தங்கம் | படிநிலை 3 "அடையாளம் தெரியாத தங்கம்"

- உற்பத்தி அல்லது புழக்கத்தில் இல்லாத பொருட்களிலிருந்து மீட்கப்பட்ட மூலப்பொருட்கள் போன்ற, நுகர்வோருக்கு முந்தைய கழிவுகளிலிருந்து மீட்கப்பட்டது.
- மறுசுழற்சி செய்யப்பட்ட வேறு ஏதேனும் தங்கம்.
- தடமறிய முடியாதவை.

பசுமைத் தங்கத்தின் உண்மையான பயன், அது எவ்வாறு பெறப்படுகிறது என்பதிலேயே உள்ளது. பொறுப்புடன் தேர்வு செய்து பயன்படுத்தப்படும் பசுமைத் தங்கமே நிலையான வளர்ச்சிக்கு துணைநிற்கும்.


நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## ஒன்று இரண்டு



ஒன்று ஒன்று பூமி சுற்றும்
... சூரியன் ஒன்று
இரண்டு இரண்டு பகல் இரவு
... பொழுதுகள் இரண்டு
மூன்று மூன்று கடிகாரத்தில்
... முட்கள் மூன்று
நான்கு நான்கு நம்மைச்சுற்றி
... திசைகள் நான்கு!

## புகையை கக்கும் ரயில்வண்டி

ஒன்று ஒன்று பூமி சுற்றும்
... சூரியன் ஒன்று
இரண்டு இரண்டு பகல் இரவு
... பொழுதுகள் இரண்டு
மூன்று மூன்று கடிகாரத்தில்
... முட்கள் மூன்று
நான்கு நான்கு நம்மைச்சுற்றி
... திசைகள் நான்கு!



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 22

# அவள் கதவு... அவன் பூட்டு...



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

**ஒரு பொருள் கிடைக்கும்போது தெரியாது.. அதை தொலைக்கும் போதுதான் தெரியும் அது நமக்கு எவ்வளவு முக்கியமானது என்று.**



ஒரு ஆண் திருமணம் செய்து கொள்ளும்போது தனக்காகவே செய்து கொள்வதாக நினைக்கிறான், பெண்ணும் அப்படியே... தனக்காகச் செய்து கொள்கிற எந்த காரியமும், பிறருக்கு அதிருப்தியை உண்டாக்கும், தனக்காக மட்டுமே வாழ்பவர்கள் மீது வெறுப்பினை உண்டாக்கும், அவர்களை விட்டுவிலகிப் போகத் தோணும், பார்த்தாலும் பேசத் தோன்றாது, சுயநலவாதி என்ற பட்டத்தைப் பெற்றுத் தரும்.



திருமணம் என்பது அப்படியல்ல, தனக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற, ஒருவனோ ஒருத்தியோ இன்னொருவருக்காக வாழ்வதன் துவக்கமே திருமணம். பெண் கதவைப் போன்றவள். எத்தகைய வீட்டையும், பாதுகாக்கும் அரணாக இருப்பது கதவு. கதவில்லாத திறந்த வீட்டிற்குள் கண்டதும் நுழையும். வீட்டின் நிம்மதி சீர்குலையும், கதவில்லா வீடு வீடாகாது.

ஆனால் கதவையும், வீட்டையும் பாதுகாக்கும் கேடயமாக இருப்பது பூட்டு, சாண் பிள்ளையாய் இருந்தாலும், ஆண்பிள்ளை என்பது சொலவடை. உண்மை தான் ஒரு சாண் அளவுள்ள பூட்டே இல்லத்தைப் பாதுகாத்து, மேம்படுத்தும், அதே வேளையில் கதவு இல்லாவிட்டால் பூட்டுக்கு அங்கு வேலை இல்லை, பூட்டு பெருமை உற வேண்டுமானால், அதற்கு கதவு அவசியம். ஆண் பெருமை உற்று சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டுமானால் பெண் அவசியம். பெண்ணின் துணை, அவளின் அன்பான ஆறுதல், அரவணைப்பு இல்லாமல் ஆணால் ஒரு அடி கூட வாழ்வில் முன்னெடுத்து வைக்க இயலாது.



ஒவ்வொரு ஆணின் வளர்ச்சியிலும் பெண்ணின் பங்கானது மிகவும் அதிக அளவில் இருப்பதைக் காணலாம். பூட்டனைய ஆண் இல்லத்தின் வலிமை. குடும்பத்தை அடுத்த உயர்வான நிலைக்கு கொண்டு செல்ல, தன்னாலான அத்தனை தியாகங்களையும் செய்யும் மெழுகுத் தூண். பூட்டைப் போல கடினத் தன்மை உடையவனே ஆண், ஆணுக்கு குடும்பத்தை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வே அதிகம் இருப்பதால் அவனால் உள்ளே ஒளிந்திருக்கும் அன்பை அதிகம், வெளிக் காட்டத் தெரியாது.

குடும்பம் பாதிக்கப்பட்டால் அவனது அன்பு பீறிட்டு வெளிவரும், அதை அவனால் கட்டுப்படுத்த இயலாது. உடைந்து அழுவான். தீர்வு காண புறப்படுவான். இல்லறம் சிறக்க வேண்டுமானால் பெரிய வீட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கதவனைய மனைவியும் கதவுக்கு பாதுகாப்பு தந்து, வீட்டைக் காக்க துணை நிற்கும் பூட்டனைய கணவனும் மிகவும் முக்கியம்.

யாருக்காகவும் நம்மை மாற்றிக் கொள்ளாத மனநிலையை உடையவராக நாம் இருந்தாலும், நமக்காக தன்னையே மாற்றிக்

கொள்ளும் கணவனோ, மனைவியோ கிடைத்தால், அவர்களைத் தொலைத்துவிடாமல் கண்ணின் கருமணி போல பாதுகாக்க வேண்டும், அவர்களின் நலத்தில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும்.

'உன் கண்ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்ற எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும், சுயநலம் மிக்கோர் இவ்வொன்றையாவது செய்தாலே போதும் வாழ்க்கை இன்பமாகும்.

இரவு 10 ஆயிற்று, அலுவலகம் முடித்து வீடுவர கணவனுக்கு நேரமாயிற்று. 7.00 மணி அளவிலேயே மனைவிக்கு அலைபேசி மூலம் தெரியப்படுத்தி விட்டான்.



அவனுக்காக சாப்பிடாமல் மனைவி காத்திருந்தாள், அவன் சாப்பிட்ட பிறகு மீதமிருப்பதை உண்ணலாம் எனப் பசியோடு வந்த கணவனுக்கு பக்கத்தில் இருந்து பரிமாறினாள், பசி மயக்கத்தில் கணவன் மிச்சமில்லாமல் அனைத்தையும் உண்டு முடிக்க, மலர்ந்து முகத்தோடு பாத்திரங்களை கழுவிப் போட்டுவிட்டு வந்த மனைவியிடம் "நீ சாப்பிட்டாயா" எனக் கேட்டான்.

"ஆமா.. நீங்க 10 மணிக்கு வருவீங்க.. அதுவரைக்கும் நாங்க சாப்பிடாமல் இருப்போம், எனக்கு பசித்தது, நான் 8 மணிக்கே சாப்பிட்டுவிட்டேன்" என்றாள். கணவன் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினான். "இந்நேரத்துல எங்க போறீங்க" கேட்டவளுக்கு "தலை வலிக்கிறது. மாத்திரை வாங்கி வருகிறேன்" எனச் சொல்லிவிட்டு வாகனத்தில் பறந்தான். நல்ல உணவகமாகத் தேடி தன் ஆசை மனைவிக்கு ருசியான உணவாக வாங்கி வந்தான்.

"இந்தாம்மா சாப்பிடு" என பொட்டலத்தைப் பிரித்து மனைவிக்கு ஊட்டத் துவங்கினான். அவள் லேசாக கண் கலங்க, பதறினான். "தூசு பட்டுவிட்டது" என்றாள். அங்கே இல்லறம் சம்மணம் போட்டு அமர்ந்தது.



அவன் கதவைக் காக்கும் பூட்டாகவும், அவள் பூட்டின் மதிப்பு அறிந்த கதவாகவும் மாறினர். இதுதான் இல்லறம், புரிதல் என்பது பேச்சினால் வருவதல்ல, உள்ளத்து அன்பினால் வருவது, புரிதலோடு நிறைந்ததே வாழ்க்கை. நல்ல கணவன் மனைவிக்கு இவர்களே இலக்கணம், வாழ்க்கை என்பது சிலருக்கு சாபமாக அமைந்தாலும், அதை வரமாக மாற்றிக்கொள்வது அவரவர் செய்கையில் தான் உள்ளது.

# வாகை சூடவா..!!

– கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

உன்னுள்ளே மாற்றம் உயர்வினைக் கூட்டும்!
தன்னுள்ளே தாழ்த்தாது தன்னம்பிக்கை ஏற்றும்!
வாழ்வென்பது ஏடேறும் வரவுசெலவு கணக்கா?
சூழ்நிலைச் சங்கிலிகள் சுற்றிவிட்ட கணக்கே!

பிறப்பென வந்துவிட்டோம் பிறகென்ன செய்வது?
இறவாதப் புகழெய்த இனியாவது புறப்படு!
எனக்கென வாய்ப்பிதுவே என்றுணர் வழியால்
உனக்கெனத் துணையாகும் உன்னுள்ளம் முதலில்!

எதிர்வரும் யாவிலும் எதிர்மறை நிறுத்தலாம்!
மதியினால் தடையுடை மலையையும் தகர்க்கலாம்!
விதியினை மாற்றிடும் வினைகளை ஆற்று!
கதியென வெற்றியே கால்தொழும் நின்று!

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
சஞ்லத்தில் உழலுவதா சாதிப்போர் வாழ்க்கை?
துஞ்சாது களமிறங்கு துவளாது இலக்கடைய
அஞ்சாது அறங்காட்டும் அணுக்கமே வாகை!










# அடுப்பில்லாமல் செய்யக்கூடிய பச்சப்புளி ரசம்

அமெரிக்கா– ஈரான் இடையிலான போர் காரணமாக தற்போது இந்தியாவில் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பெங்களூரு, சென்னை போன்ற இடங்களில் உள்ள ஹோட்டல்களுக்கு சப்ளை செய்யப்படும் சிலிண்டர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர்களும் கிடைப்பதில் ஆங்காங்கு தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இப்படியான சூழ்நிலையில் திடீரென்று வீட்டில் சிலிண்டர் காலியாகிவிட்டால் எப்படி இருக்கும்? கவலைப்பட வேண்டாம். அடுப்பில்லாமலேயே நிறைய ரெசிபிக்களை செய்யலாம். அதுவும் நம் முன்னோர்கள் இதுப்போன்று பல ரெசிபிக்களை செய்துள்ளனர். அதில் ஒன்று தான் பச்சப்புளி ரசம்.

இந்த ரசம் செய்வதற்கு மிகவும் சுலபமாக இருப்பதோடு, உடலுக்கு மிகவும் நல்லது கூட. அதுவும் கோடைக்காலத்தில் இந்த ரசத்தை செய்து சாப்பிடும் போது, பல நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக செரிமான பிரச்சனைகள் நீங்கும்

உங்களுக்கு இந்த பச்சப்புளி ரசத்தை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த இதழில் பச்சப்புளி ரசம் ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்:**

- பூண்டு – 6 பல்
- சீரகம் – 1 டீஸ்பூன்
- மிளகு – 1 டீஸ்பூன்
- புளி – 1 எலுமிச்சை அளவு
- வரமிளகாய் – 2
- பெருங்காயத் தூள் – 1/2 டீஸ்பூன்
- உப்பு – சுவைக்கேற்ப
- பச்சை மிளகாய் – 2
- சின்ன வெங்காயம் – 6
- தண்ணீர் – தேவையான அளவு
- கறிவேப்பிலை – 1 கொத்து
- கொத்தமல்லி – சிறிது

**செய்முறை:**

- முதலில் புளியை நீரில் ஊற வைத்து, நன்கு பிசைந்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- பின்பு இடி உரலில் பூண்டு பற்கள், சீரகம் மற்றும் மிளகு ஆகியவற்றை சேர்த்து நன்கு இடித்துக் கொள்ள வேண்டும்.

- பிறகு ஒரு பாத்திரத்தில் புளி நீரை ஊற்றி, அத்துடன், வரமிளகாயை கிள்ளி சேர்க்க வேண்டும்.
- பின்பு அதில் பெருங்காயத் தூள், சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.
- பின்னர் பச்சை மிளகாயை கீறி சேர்த்து, அத்துடன் சின்ன வெங்காயத்தை தட்டிப் போட வேண்டும்.
- அதன் பின் அதில் தட்டி வைத்துள்ள பூண்டு மிளகு சீரகத்தை சேர்க்க வேண்டும்.
- அடுத்து அதில் தேவையான அளவு நீரை ஊற்றி, அதில் கறிவேப்பிலை மற்றும் கொத்தமல்லியை பொடியாக நறுக்கி சேர்த்து, கைகளால் நன்கு ஒருமுறை பிசைந்துவிட்டால், சுவையான பச்சப்புளி ரசம் தயார்.




**கட்டுரையாக்கம்:**

**உமாராணி சொக்கலிங்கம்.**
**நற்சாந்துபட்டி ஈரோடு.**




இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி–22

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!**



-முனைவர். கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி



## உள்ளடி

" ஏண்டா! தம்பி அந்த சுப்பிரமணி பயகிட்ட யோசன கேட்காதன்னு எத்தன தடவ சொன்னேன்! கேட்டியா? இப்பப்பாரு அவன் உள்ளடி வேல பாத்துருக்கான்" இங்கு குறிப்பிடப்படும் உள்ளடி என்பது, உள்ளத்தின் அடியில் பதிந்த கமுக்கமான செய்தி என்று பொருள்படும். அதாவது, மனதில் தீய உள்நோக்கத்தோடு, பேசுவது செயல்படுவது உள்ளடி வேலை எனப்படுகிறது.

## உறண்டை

" அடியே! சிவகாமி! வளவுக்குள்ள அவுக வீட்டுல விளையாடும்போது, அந்த பார்வதி லீவுக்கு வந்துருக்கா. அவ கூட ரொம்ப பேசாத, ஒறண்ட (உறண்டை) இழுத்துவிட்டுருவா. பாத்து சாக்கரதையா விளையாடு" என்ற அப்பத்தாக்களின் அக்கறையான பேச்சில், இருக்கின்ற உறண்டை என்ற சொல்லுக்கு தொல்லை தருதல் என்பது பொருள்.சிலருடன் பேசும் போது அவர்களால் தொல்லை உண்டாகும் என்பதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

## உறைப்பு



" ஏண்டி! கொழம்புல மிளகாய்ப்பொடி போட்டியா? இல்ல! மிளகாய் பொடியில கொழப்பு வச்சியா? வாயில வைக்க முடியல. ஒரே உறப்பா இருக்கு" என்று அதிக காரம் வந்த போது நாம் சொல்வதுண்டு. இங்கு உறைப்பு என்பது அதிகக் காரம் எனப் பொருள் தருகிறது. உறைப்பு என்பது பண்புப் பெயர். உறைக்கும் பொருளைச் சுள்ளென்று இருக்கிறது என்றும் கூறுவது உண்டு. "சுள்ளென்று" என்று சுடுதலோடு ஒப்பிட்டுக் கூறுவதும் உண்டு.

## உறை மோர்



"ஆத்தா! லெட்சுமி, உற மோர மறந்துராம எடுத்து வச்சிரு. அன்னக்கி பாரு! மறந்துட்ட. மோரு நல்லாவே இல்ல" இங்கு குறிப்பிடப்படும் உறை மோர் என்பது, உறை மோர் என்பது பாலைத் தயிராக மாற்றுவதற்காக,

காய்ச்சிய பாலில் சிறிது சேர்க்கப்படும் புளித்த மோர் அல்லது தயிர் ஆகும். இது 'பிரை மோர்' என்றும் அழைக்கப்படுகிறது, இது பாலில் உள்ள பாக்டீரியாக்களைச் செயல்பட வைத்து, பாலை உறைய (தயிர் ஆக) வைக்கிறது.

**உசுப்பேத்துதல்**



"அவனே சும்மா கிடக்குறான். அவன ஏண்டா! உசுப்பேத்தி விடுற. அவன் வளவுக்குள்ள போய் சத்தம் போட்டு சண்டைய உண்டாக்கிருவான்" இங்கு சொல்லப்படும் உசுப்பேத்துதல் என்பது, உசுப்பேத்துதல் என்பது ஒருவரைத் தூண்டிவிடுதல், கோபமடையச் செய்தல் அல்லது ஒரு செயலைச் செய்ய ஆத்திரமூட்டுதல் என்று பொருள்படும். இது ஒருவரை உணர்ச்சிவசப்பட வைத்து, நிலைமையைக் கட்டுப்பாடின்றி கோபமாகவோ அல்லது உணர்ச்சிப்பூர்வமாகவோ மாற்றும் பேச்சு அல்லது செயலைக் குறிக்கும்.

– தொடர்ந்து பேசுவோம்

# தாய்மை

கருவைத் தாங்கி
உறவு வளர்க்கும்
உருவம் கொடுத்து
உயிர் பிறக்கும்

சுகமான சுமையாம்
சுந்தரத் தாய்மை
இன்னல் மிகுந்த
இனிமை தாய்மை
வலிகள் நிறைந்த
வலிமை தாய்மை
ஆண்மையை
அரவணைக்கும்
ஆதிமூலம் தாய்மை

சுயநல மில்லா
தனித்துவம் தாய்மை
தாய்மையின் தன்மை
தியாகத்தின் எல்லை
ஐந்தறிவு சீவனிலும்
ஒளிரும் உண்மை


தன்னி கரில்லாத
தாய்மை உன்னதம்
பேணிப் போற்றுவோம்
பெண்மையின் புனிதம்!



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# பூஜியத்தில் பிறந்து... மதிப்புடன் வாழ்வது எப்படி?

–இராம. சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி



மனித வாழ்க்கை ஒரு சுவாரஸ்யமானதும் ஆழமான அர்த்தம் கொண்டதுமான பயணம். அது பூஜியத்தில் தொடங்கி மீண்டும் பூஜியத்திலேயே முடிகிறது. ஒரு மனிதன் பிறக்கும் போது எதையும் கொண்டு வருவதில்லை; அதுபோலவே மரணிக்கும் போது எதையும் எடுத்துச் செல்ல முடியாது. இந்த இரண்டு பூஜியங்களுக்கிடையே இருக்கும் காலமே வாழ்க்கை. அந்த காலத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில்தான் மனிதனின் உண்மையான மதிப்பும் அர்த்தமும் இருக்கிறது.

எண்களில் பூஜியத்திற்குப் பிறகு வரும் ஒவ்வொரு எண்ணும் அதன் மதிப்பை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதுபோல மனித வாழ்க்கையும் இருக்க வேண்டும். பிறப்பில் நாம் பூஜியம் என்றாலும், வாழ்கையில் நம்முடைய முயற்சி, உழைப்பு, திறமை, அறிவு ஆகியவற்றின் மூலம் நம் மதிப்பை உயர்த்திக் கொள்ள முடியும்.

நம் வாழ்க்கையின் உயர்வும் முன்னேற்றமும் இந்த முயற்சிகளில் தான் அடங்கியுள்ளது.

ஒரு மனிதன் தொடர்ந்து உழைத்து, புதிய விஷயங்களை கற்றுக் கொண்டு, தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொண்டால், அவன் வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டே இருக்கும்.



அது அருவி போல ஓடிக்கொண்டே உயர்ந்து செல்லும். ஆனால் முயற்சி இல்லாமல், கற்றல் இல்லாமல் வாழ்ந்தால் வாழ்க்கை அதே நிலைமையில் நின்றுவிடும். அதனால் தான் கற்றலும் அனுபவமும் மனித வாழ்க்கையின் மிக முக்கியமான அங்கங்களாக கருதப்படுகின்றன.

இன்றைய உலகம் மிகவும் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. தொழில்நுட்பம், அறிவியல், சமூக சூழ்நிலை போன்றவை தினமும் புதிதாக உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அதனால் இப்போது வாழ்கின்ற வாழ்க்கை நிலைக்கு ஏற்ப பல புதிய விஷயங்களை கற்று, அறிந்து, புரிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். இது வாழ்க்கையை சுலபமாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற உதவும்.

ஆனால் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பது முக்கியமல்ல. நம் வாழ்க்கைக்கும் சூழ்நிலைக்கும் தேவையான விஷயங்களை அறிந்து வைத்திருப்பதே உண்மையில் முக்கியமானது. தேவையில்லாத பல விஷயங்களை தெரிந்து வைத்திருப்பதில் பெரிதாக பயன் இல்லை. அதற்குப் பதிலாக நம் வாழ்க்கையை மேம்படுத்தும் அறிவைத் தேர்ந்தெடுத்து கற்றுக் கொள்வது மிகவும் முக்கியம்.



ஒவ்வொரு மனிதனும் தன்னுக்குத் தெரியாததை கற்றுணர்ந்து, அனுபவத்தின் மூலம் வளர்ந்து கொள்ள வேண்டும். அதுவே மனிதனின் தனிப்பட்ட பொறுப்பும் கடமையும் ஆகும். பூஜியத்தில் தொடங்கிய இந்த வாழ்க்கைப் பயணத்தை அர்த்தமுள்ளதாக்குவது நம்முடைய எண்ணங்களும் செயல்களும் தான். நாம் எவ்வளவு கற்றுக் கொள்கிறோம், எவ்வளவு வளர்கிறோம் என்பதில்தான் நம் வாழ்க்கையின் உண்மையான மதிப்பு உருவாகிறது.

# பங்கு சந்தை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) மற்றும் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

## இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

STUDDS
RIDE YOUR DREAMS

Studds Accessories

**STUDDS ACCESSORIES LIMITED (544599/STUDDS)**

## நிறுவனத்தைப் பற்றி:–

STUDDS ACCESSORIES LIMITED 1983–ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், தனது முதல் ஹெல்மெட்டை ஒரு கேரேஜில் தயாரித்ததிலிருந்து, ஆண்டுக்கு 9.04 மில்லியன் யூனிட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட உற்பத்தி வசதிகளைக் கொண்டிருக்கும் அளவிற்கு நீண்ட தூரம் பயணித்துள்ளது.

கடந்த 4 தசாப்தங்களாக, இருசக்கர வாகன ஓட்டிக்குப் பாதுகாப்பை வழங்குவோம் என்ற தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நிறுவனங்கள் தங்களைத் தொடர்ந்து புதுமைப்படுத்திக் கொண்டுள்ளன.

இந்நிறுவனம் உலகெங்கிலும் உள்ள தனது வாடிக்கையாளர் களிடமிருந்து மிகுந்த அன்பையும் பாசத்தையும் பெற்றுள்ளதுடன், 2023 நிதியாண்டில் வருவாயின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய இருசக்கர வாகன ஹெல்மெட் நிறுவனமாகவும், மேலும் 2024 நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட ஹெல்மெட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய இருசக்கர வாகன ஹெல்மெட் நிறுவனமாகவும் திகழ்கிறது.

இந்நிறுவனம் 'STUDDS' மற்றும் 'SMK' பிராண்டுகளின் கீழ் இருசக்கர வாகன ஹெல்மெட்டுகளை வடிவமைத்து, உற்பத்தி செய்து, சந்தைப்படுத்தி, விற்பனை செய்கிறது. ஒரு ஹெல்மெட் பிராண்டுடன் தொடர்புடைய பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் தரம் ஆகியவை வாடிக்கையாளர் நம்பிக்கையை அதிகரித்து, வாங்கும் முடிவைப் பாதிக்கும் முக்கிய பண்புகளாகும்.

காலப்போக்கில், தங்கள் ஹெல்மெட்டுகளின் பாதுகாப்பு அம்சங்களையும் தரத்தையும் மேம்படுத்துவதில் தாங்கள் காட்டிய தொடர்ச்சியான கவனம், வாடிக்கையாளர்கள் மத்தியில் தங்கள் பிராண்டுகளை ஒரு நம்பகமான பிராண்டாக நிலைநிறுத்த உதவியுள்ளதாக நிறுவனம் நம்புகிறது. அவர்களின் தயாரிப்புகள் இந்தியா முழுவதும் மற்றும் சர்வதேச அளவில் 70-க்கும் மேற்பட்ட நாடுகளில் விற்கப்படுகின்றன. அமெரிக்கா, ஆசியா (இந்தியா தவிர), ஐரோப்பா மற்றும் உலகின் பிற பகுதிகளில் அவர்களின் முக்கிய ஏற்றுமதி சந்தைகள் அமைந்துள்ளன.

இந்நிறுவனத்திற்கு இந்தியாவில் நான்கு உற்பத்தி ஆலைகள் உள்ளன, மேலும் ஐந்தாவது உற்பத்தி ஆலை தற்போது கட்டுமானத்தில் உள்ளது. அவற்றின் உற்பத்தி ஆலைகள் I, II மற்றும் III ஆகியவை இணைந்து 9,040,000 இருசக்கர வாகன ஹெல்மெட்டுகள் மற்றும் பெட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. இவை வைசர்களுக்கான தானியங்கி சிலிக்கான் கடினப் பூச்சு வசதி, வைசர்களுக்குப் பூசுவதற்கான ஸ்பட்டரிங் மற்றும் மெட்டலைசிங் தொழில்நுட்பங்கள், நிறுவனத்திற்குள்ளேயே ஹெல்மெட் லைனர்கள் தைக்கும் வசதி, கன்வேயர் அசெம்பிளி லைன், நிறுவனத்திற்குள்ளேயே அச்சு தயாரிக்கும் பட்டறை மற்றும் வடிவமைப்பு மையம், நிறுவனத்திற்குள்ளேயே பெயிண்டிங் லைன்கள், தானியங்கி துணி வெட்டும் மற்றும் தைக்கும் லைன்கள், மற்றும் இங்கிலாந்தின் வாகனச் சான்றிதழ் முகமையால் (VCA) சான்றளிக்கப்பட்ட நிறுவனத்திற்குள்ளேயே உள்ள ஹெல்மெட் சோதனை ஆய்வகம் ஆகியவற்றைக் கொண்டு முழுமையாகச் சித்தப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், உற்பத்தி ஆலை IV ஆனது 9,000,000 விரிவாக்கப்பட்ட பாலிஸ்டிரீன் லைனர்களையும் (EPS லைனர்கள்) மற்றும் உற்பத்தி ஆலைகள் I, II & III–இல் சொந்தப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் 15,00,000 வாட்டர் டிரான்ஸ்ஃபர் டெக்கால்களையும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

இந்நிறுவனம், 'STUDDS' மற்றும் 'SMK' பிராண்டுகளின் கீழ் இருசக்கர வாகன ஹெல்மெட்களையும், 'STUDDS' பிராண்டின் கீழ் இருசக்கர வாகன லக்கேஜ், கையுறைகள், ஹெல்மெட் பூட்டு சாதனம், மழைக்கால உடைகள், ரைடிங் ஜாக்கெட் மற்றும் கண் பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற பிற துணைப் பொருட்களையும் வடிவமைத்து, தயாரித்து, சந்தைப்படுத்தி, விற்பனை செய்கிறது. இதன் தயாரிப்புகள் இந்தியா முழுவதும் மற்றும் சர்வதேச அளவில் பல நாடுகளில் விற்கப்படுகின்றன. இதன் முக்கிய ஏற்றுமதி சந்தைகள் அமெரிக்கா, ஆசியா (இந்தியா தவிர), ஐரோப்பா மற்றும் உலகின் பிற பகுதிகளில் அமைந்துள்ளன. மேலும், இது Jay Squared LLC நிறுவனத்திற்காக ஹெல்மெட்களைத் தயாரிக்கிறது, அவை அமெரிக்காவில் 'Daytona' பிராண்டின் கீழ் விற்கப்படுகின்றன. அத்துடன், O'Neal நிறுவனத்திற்காகவும் அவர்களின் பிராண்டிங்கின் கீழ் ஹெல்மெட்களைத் தயாரித்து, ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா சந்தைகளுக்கு விநியோகம் செய்கிறது.

**நிறுவனத்தின் தயாரிப்புகள்:**

**'STUDDS'**

**Trooper DV D2 hellcat decor**
**Raider Skulpt D1 decor**
**Drifter D5 fiker decor**
**Vogue open face helmet**

**'SMK'**

**Typhoon sports tourer**
**Typhoon aerot**
**Stellar sport uno**
**Gullwing supertour**
**Allterra fulmine**

**அடிப்படைக் கண்ணோட்டம்:–**

நிறுவனத்தின் ஒருங்கிணைந்த ஒரு பங்கு வருமானம் (EPS) 17.70 (2025–03 அன்று முடிவடைந்த கடந்த பன்னிரண்டு மாதங்களுக்கானது), மற்றும் தொழில்துறை PE விகிதமான 38.29 உடன் ஒப்பிடும்போது, இதன் ஒருங்கிணைந்த PE விகிதம் 29.03 ஆகும். முகமதிப்பு 5 ஆகும்.

நிறுவனம் ஏறக்குறைய கடனற்றது.

நிறுவனம் 17.2% என்ற ஆரோக்கியமான ஈவுத்தொகை வழங்கலைப் பராமரித்து வருகிறது.

சமீபத்திய தரவுகளின்படி, பிரமோட்டர்களின் பங்குகள் 61.75% ஆகும்.

**நிறுவன அடிப்படைகள்:–**

## Studds Accessories Ltd

₹ 481 -1.91%
23 Mar 3:47 p.m.

studds.com  BSE: 544599  NSE: STUDDS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Market Cap | ₹ 1,899 Cr. | Current Price | ₹ 481 | High / Low | ₹ 600 / 469 |
| Stock P/E | 25.6 | Book Value | ₹ 122 | Dividend Yield | 0.00 % |
| ROCE | 22.6 % | ROE | 16.7 % | Face Value | ₹ 5.00 |

STUDDS ACCESSORIES LIMITED பங்கு விலை நிலவரம்.
STUDDS ACCESSORIES LIMITED நிறுவனத்தின் பங்கு விலை, அதன் முந்தைய இறுதி விலையான ரூ. 490.65–லிருந்து –1.91% சரிந்துள்ளது. ஸ்டட்ஸ் அக்சஸரீஸ் லிமிடெட் பங்கின் கடைசி வர்த்தக விலை ரூ. 481.30 ஆகும்.

# நிறுவன நிதி நிலை:–

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**

Company's annual revenue growth of 11.01% outperformed its 3 year CAGR of 8.24%. (Source: Standalone Financials)

**Employee & Interest Expense**

Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 10.72% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | DEC 2025 | SEP 2025 | JUN 2025 | SEP 2024 |
|---|---|---|---|---|
| Total Income | 165.67 | 157.32 | 152.01 | 147.94 |
| Total Income Growth (%) | ↑5.31 | ↑3.49 | ↑2.75 | ↑3.85 |
| Total Expenses | 137.68 | 129.85 | 124.10 | 123.68 |
| Total Expenses Growth (%) | ↑6.03 | ↑4.63 | ↑0.34 | ↑2.34 |
| EBIT | 27.99 | 27.48 | 27.91 | 24.26 |
| EBIT Growth (%) | ↑1.89 | ↓-1.57 | ↑15.08 | ↑12.29 |
| Profit after Tax (PAT) | 20.72 | 20.62 | 20.25 | 17.49 |
| PAT Growth (%) | ↑0.49 | ↑1.86 | ↑15.74 | ↑11.07 |
| EBIT Margin (%) | 16.90 | 17.46 | 18.36 | 16.40 |
| Net Profit Margin (%) | 12.51 | 13.11 | 13.32 | 11.82 |
| Basic EPS (₹) | 5.27 | 5.24 | 5.14 | 8.89 |

▲ BACK TO TOP

**3 ஆண்டு வருவாய் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை விஞ்சியது.**

நிறுவனத்தின் 11.01% ஆண்டு வருவாய் வளர்ச்சியானது, அதன் 8.24% 3 ஆண்டு கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை விஞ்சியுள்ளது. (ஆதாரம்: ஸ்டாண்டலோன் ஃபைனான்சியல்ஸ்).

**பணியாளர் மற்றும் வட்டிச் செலவு.**

மார்ச் 31, 2025–இல் முடிவடையும் நிதியாண்டில், நிறுவனம் தனது இயக்க வருவாயில் 1%–க்கும் குறைவாக வட்டிச் செலவுகளுக்காகவும், 10.72%–ஐ பணியாளர் செலவுகளுக்காகவும் செலவிட்டுள்ளது. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள்).

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**All Debts Paid-off**

Company has become debt free for the first time since last 5 years. (Source: Standalone Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Total Assets | 556.71 | 485.56 |
| Total Assets Growth (%) | ↑14.65 | ↑5.31 |
| Total Liabilities | 107.23 | 98.16 |
| Total Liabilities Growth (%) | ↑9.24 | ↓-20.23 |
| Total Equity | 449.48 | 387.41 |
| Total Equity Growth (%) | ↑16.02 | ↑14.61 |
| Current Ratio (x) | 2.54 | 2.05 |
| Total Debt to Equity (x) | 0.01 | 0.00 |
| Contingent Liabilities | 9.50 | 6.79 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

▲ BACK TO TOP

View Details »

**அனைத்து கடன்களும் அடைக்கப்பட்டன.**
**கடந்த 5 ஆண்டுகளில் முதன்முறையாக நிறுவனம் கடனில் இருந்து விடுபட்டுள்ளது. (ஆதாரம்: ஸ்டாண்டலோன் ஃபைனான்சியல்ஸ்).**

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 51.08 cr for investing activities which is an YoY increase of 155.17%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 63.26 | 71.86 |
| Net Cash used in Investing Activities | -51.08 | -20.02 |
| Net Cash flow from Financing Activities | -8.77 | -41.15 |
| Net Cash Flow | 3.41 | 10.70 |
| Closing Cash & Cash Equivalent | 38.98 | 35.57 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | 19.59 | 143.01 |
| Total Debt/ CFO (x) | 0.05 | 0.01 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise*

View Details »

முதலீடுகளிலிருந்து கிடைத்த பணத்தின் தொகை அதிகரிப்பு
நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ரூ. 51.08 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 155.17% அதிகரிப்பாகும்.
(ஆதாரம்: கன்சாலிடேட்டட் ஃபைனான்சியல்ஸ்)

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED


| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Return on Equity (%) | 15.49 | 14.77 |
| Return on Capital Employed (%) | 19.91 | 18.65 |
| Return on Assets (%) | 12.50 | 11.78 |
| Interest Coverage Ratio (x) | 96.07 | 60.44 |
| Asset Turnover Ratio (x) | 1.12 | 1.12 |
| Price to Earnings (x) | - | - |
| Price to Book (x) | - | - |
| EV/EBITDA (x) | - | - |
| EBITDA Margin (%) | 20.02 | 18.33 |

▲ BACK TO TOP

## தொழில்நுட்ப விளக்கப்படம்:–




## சக நிருவன ஒப்பீடு:–



# Peer Group Comparison

Ratio Performance | Stock Performance

Studds Accessor. ✕ | Finolex Inds. ✕ | V I P Inds. ✕ | Safari Inds. ✕ | ⊕ Select

| Name | Price(₹) | Chg(%) | Mkt Cap(₹ Cr) | Sales(₹ Cr) | Profit(₹ Cr) |
|---|---|---|---|---|---|
| Studds Accessor. | 479.85 | -1.94 | 1,889 | 163 | 21 |
| Finolex Inds. | 167.50 | -4.01 | 10,393 | 898 | 116 |
| V I P Inds. | 318.50 | -5.50 | 4,524 | 454 | -53 |
| Safari Inds. | 1,501.00 | -1.45 | 7,355 | 512 | 33 |

## பங்குதாரர் பங்கஅமைப்பு:-


QOQ Change | Total Shareholdings




*Showing Studds Accessories Shareholding as on Dec 2025*

| CATEGORY | DEC 2025 |
|---|---|
| Promoters | 61.75 |
| Pledge | 0.00 |
| FII | 1.36 |
| DII | 8.98 |
| Mutual Funds | 7.35 |
| Others | 27.90 |

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Dec 2025*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 2,43,02,320 | 61.75 % | - |
| Pledge | 0 | 0.00 % | - |
| FII | 5,34,911 | 1.36 % | - |
| DII | 35,34,123 | 8.98 % | - |
| MF | 28,93,914 | 7.35 % | - |
| Others | 1,09,82,046 | 27.90 % | - |

## Funds Owning this Stock

| Scheme Name | Amount Invested (₹ Cr) | No Of Shares | Net Asset (%) |
|---|---|---|---|
| Aditya Birla SL Equity Savings Fund (G) | 0.28 | 5,329 | 0.03 |
| Aditya Birla SL Equity Savings Fund - Direct (G) | 0.28 | 5,329 | 0.03 |
| Edelweiss Recently Listed IPO Fund (G) | 14.38 | 2,76,600 | 1.63 |
| Edelweiss Recently Listed IPO Fund (IDCW) | 14.38 | 2,76,600 | 1.63 |
| Edelweiss Recently Listed IPO Fund - Dir (G) | 14.38 | 2,76,600 | 1.63 |
| Edelweiss Recently Listed IPO Fund - Dir (IDCW) | 14.38 | 2,76,600 | 1.63 |
| HDFC Consumption Fund - Direct (G) | 12.93 | 2,48,631 | 1.30 |
| HDFC Consumption Fund - Direct (IDCW) | 12.93 | 2,48,631 | 1.30 |
| HDFC Consumption Fund - Regular (G) | 12.93 | 2,48,631 | 1.30 |

| | | | |
|---|---|---|---|
| HDFC Consumption Fund - Regular (IDCW) | 12.93 | 2,48,631 | 1.30 |
| HDFC Transportation and Logistics Fund - Dir (G) | 13.34 | 2,56,425 | 0.76 |
| HDFC Transportation and Logistics Fund - Dir (IDCW) | 13.34 | 2,56,425 | 0.76 |
| HDFC Transportation and Logistics Fund - Reg (G) | 13.34 | 2,56,425 | 0.76 |
| HDFC Transportation and Logistics Fund - Reg (IDCW) | 13.34 | 2,56,425 | 0.76 |
| ICICI Pru Multi-Asset Fund (G) | 54.09 | 10,40,148 | 0.07 |
| ICICI Pru Multi-Asset Fund (IDCW) | 54.09 | 10,40,148 | 0.07 |
| ICICI Pru Multi-Asset Fund - Direct (G) | 54.09 | 10,40,148 | 0.07 |
| ICICI Pru Multi-Asset Fund - Direct (IDCW) | 54.09 | 10,40,148 | 0.07 |
| ICICI Pru Transportation and Logistics Fund-Dir (G) | 26.67 | 5,12,825 | 0.88 |

| | | | |
|---|---|---|---|
| ICICI Pru Transportation and Logistics Fund-Dir (IDCW) | 26.67 | 5,12,825 | 0.88 |
| ICICI Pru Transportation and Logistics Fund-Reg (G) | 26.67 | 5,12,825 | 0.88 |
| ICICI Pru Transportation and Logistics Fund-Reg (IDCW) | 26.67 | 5,12,825 | 0.88 |
| ITI Flexi Cap Fund - Direct (G) | 10.11 | 1,94,326 | 0.80 |
| ITI Flexi Cap Fund - Direct (IDCW) | 10.11 | 1,94,326 | 0.80 |
| ITI Flexi Cap Fund - Regular (G) | 10.11 | 1,94,326 | 0.80 |
| ITI Flexi Cap Fund - Regular (IDCW) | 10.11 | 1,94,326 | 0.80 |
| Nippon India Small Cap Fund (B) | 28.95 | 5,56,582 | 0.04 |
| Nippon India Small Cap Fund (G) | 28.95 | 5,56,582 | 0.04 |
| Nippon India Small Cap Fund (IDCW) | 28.95 | 5,56,582 | 0.04 |

| | | | |
|---|---|---|---|
| Nippon India Small Cap Fund - Direct (B) | 28.95 | 5,56,582 | 0.04 |
| Nippon India Small Cap Fund - Direct (G) | 28.95 | 5,56,582 | 0.04 |
| Nippon India Small Cap Fund - Direct (IDCW) | 28.95 | 5,56,582 | 0.04 |

**ஆய்வாளரின் தனிப்பட்ட பார்வையில்:–**

STUDDS ACCESSORIES LIMITED, ஹெல்மெட்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் உபகரணங்களைத் தயாரித்து விற்பனை செய்வதில் நிபுணத்துவம் பெற்ற ஒரு முன்னணி இந்திய நிறுவனம் ஆகும். இது இன்னும் புதிதாகப் பட்டியலிடப்பட்டுள்ளதால், அவ்வப்போது மதிப்பாய்வு செய்வது அவசியம். ஒட்டுமொத்தமாக அடிப்படைகள் மற்றும் நிதி அளவுருக்கள் நன்றாகத் தெரிகின்றன. எனது தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தரக் காலம் (9 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட காலம் (24 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை) வரையிலான முதலீட்டிற்கு இது உகந்ததாகத் தெரிகிறது. நடுத்தரக் காலத்தில் ரூபாய்750+ – க்கு மேல் எதிர்பார்க்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வின்படி, நீண்ட காலத்தில் ரூபாய்900+ – க்கு மேல் எதிர்பார்க்கலாம்.

## எமது ஆய்வுப் பார்வையில் இந்த மாதத்திற்கான குறுகிய கால பங்குகள் குறித்த பரிந்துரைகள் :

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Castrol India, NSE: CASTROLIND -**
**Entry 180 – 190, Accumulate on downside More and More till 150.**
**Target 1 – 220, Target 2 – 250.**

2, **ITC Ltd, NSE: ITC -**
**Entry 280 – 290, Accumulate on downside More and More till 250.**
**Target 1 – 280, Target 2 – 320.**

3, **NTPC Ltd, NSE: NTPC -**
**Entry 340 – 350, Accumulate on downside More and More till 300.**
**Target 1 – 390, Target 2 – 420.**

4, **Tata Power Company Ltd, NSE: TATAPOWER -**
**Entry 370 – 380, Accumulate on downside More and More till 320.**
**Target 1 – 420, Target 2 – 460.**

5, **TAJ GVK Hotels and Resorts Ltd, NSE TAJGVK -**
**Entry 330 – 340, Accumulate on downside More and More till 300.**
**Target 1 – 370, Target 2 – 440.**

6, **Canara Bank Ltd, NSE: CANBK -**
**Entry 130 – 135, Accumulate on downside More and More till 100.**
**Target 1 – 150, Target 2 – 170.**

7, **Ashok Leyland Ltd, NSE: ASHOKLEY -**
**Entry 160 – 165, Accumulate on downside More and More till 120.**
**Target 1 – 180, Target 2 – 200.**

8, Ashoka Buildcon Ltd, NSE: ASHOKA -
Entry 125 – 135, Accumulate on downside More and More till 100.
Target 1 – 160, Target 2 – 180.

9, National Aluminium Co Ltd, NSE: NATIONALUM -
Entry 340 – 350, Accumulate on downside More and More till 300.
Target 1 – 380, Target 2 – 420.

10, Wipro Ltd, NSE: WIPRO -
Entry 170 – 180, Accumulate on downside More and More till 140.
Target 1 – 200, Target 2 – 220.

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# யாருக்கு மாப்பிள்ளை யாரோ!?

–ஜோதிடர் எல்லி
9894176494

யாருக்கு மாப்பிள்ளை யாரோ!?
அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ!?
என்ற கவியரசர் கண்ணதாசன் பாடல் வரிகளுக்கேற்ப திருமணம் பற்றிய எதிர்ப்பார்ப்புகள் எல்லோரையும் ஆட்டிப்படைக்கும்.

அவரவர் மனதில் சில ஆசைகளும் விருப்பங்களும் இருக்கவே செய்தாலும் நினைத்தபடி நடக்குமா? என்று பார்க்கையில் அது விதியின் வழியில் சென்று நிற்கிறது.



ஒருவருக்கு திருமணம் எப்போது அமையும்?. எப்படிப்பட்ட வாழ்க்கை துணை அமையும்? வரப்போகும் கணவன் அல்லது மனைவியின் கல்வி குணாதிசயங்கள் எப்படி இருக்கும்?

தார தோஷம், களத்திர தோஷம் பற்றிய பார்வை அதனை எவ்வாறு புரிந்து கொள்வது இவைகளை பற்றி ஜோதிடம் என்ன சொல்கிறது என்பதை இந்த கட்டுரை யில் காண்போம்.

**முதலில் உரிய வயதில் யாருக்கு கல்யாணம் நடக்கும் என்பதை பார்க்கலாம்.**

ஆண்,பெண் இருவருக்கும் பொதுவான களத்திர காரகன் சுக்கிரன் ஆவார். பெண்களுக்கு பிரத்யேகமாக செவ்வாயும் களத்திர காரகனாக வருகிறார். ஆகவே சுக்கிரன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் ஜாதகத்தில் நீசம், மற்றும் அஸ்தமனம் பெறாமல் இருக்க வேண்டும். கூடவே இயற்கை அசுப கிரகங்கள் உடன் சேர்க்கை இல்லாமலும் இருத்தல் அவசியமாகும். களத்திர ஸ்தானமாகிய ஏழாம் பாவகத்தில் பாவர்கள் இருக்க கூடாது. குடும்ப ஸ்தானமாகிய இரண்டாம் வீடும் பாவர் தொடர்பு இல்லாமல் இருத்தல் வேண்டும்.



சுக்கிரன் பலம் பெற்று இளமையில் தசா வரும் போது திருமணம் சீக்கிரத்தில் கைகூடி விடும். குரு ஏழாம் பாவகத்தை பார்வை செய்யும் ஜாதகருக்கு இளமையில் குரு தசா வரும் போது திருமணம் இளம் வயதிலேயே நடந்து விடும். இது போன்ற அமைப்பு உள்ள ஜாதகர்கள் திருமணத்தை தள்ளி போட நினைத்தாலும் நடக்காது, காலாகாலத்தில் அமைந்து விடும்.

## யாருக்கு தாமத திருமணம்..?

"கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன் "என்ற பழமொழிக்கு ஏற்ப உற்றார் உறவினர் வழியில் நல்ல மாப்பிள்ளைகள் இருந்தும் அப்புறம் பார்க்கலாம், இன்னும் சிறப்பாக வேண்டும், வெளியூர் மாப்பிள்ளை வேண்டும் என்று நல்ல வாய்ப்புகளை தவறவிட்டு பின்பு வயது ஆன பின்பு பரபரப்பும் தவிப்பும் அடையும் பெற்றோர்களை நாம் பார்த்து இருப்போம்.

எய்தவரை விட்டு விட்டு அம்பை நோவானேன் என்பது போல கிரகங்கள் கர்ம வினை களை ஆற்றும் போது பெண்ணையோ பையனையோ குறை சொல்லி என்ன ஆகப் போகிறது.

ஏழில் சர்ப்ப கிரகங்கள் அல்லது இயற்கை பாவர்கள் இருக்கும் ஜாதகர்களுக்கு திருமணம் தள்ளி போகும். ஏழாம் அதிபதி 6,8,12ல் மறைவதும் மேற்கண்ட ஆதிபத்ய அதிபதிகளுடன் சேர்ந்து இருக்கும் ஜாதகர்களுக்கும் திருமண தடை உண்டாகிறது. பாதகாதிபதி ஏழில் நிற்பதும் திருமண விசயத்தில் தாமதம் ஏற்படுகிறது.

இரண்டாம் பாவகத்தில் பாவர் நிற்பதும் குடும்பம் அமைய தாமதத்தை உண்டாக்கிறது.



### தார தோஷம் மற்றும் களத்திர தோஷம்

ஏழில் பாவிகள் அமைந்து சுக்கிரன் முழுமையாக பாதிப்பு அடைந்த நிலையில் உள்ள ஜாதகம்.

7 மற்றும் 11 அதிபதிகள் இணைந்து இருப்பது அல்லது இருவரும் சாரப்பரிவர்த்தனை அடைந்து உள்ள ஜாதகம். பெண்களுக்கு எட்டாம் பாவகம் ஆயுள் மற்றும் மாங்கல்ய ஸ்தானமும் ஆகும். எனவே பெண்கள் ஜாதகத்தில் எட்டில் பாவிகள் சேர்க்கை பெற்றால் தோஷம் உண்டாகிறது.



ஏழில் சூரியன்செவ்வாய் இணைந்து இருப்பது அல்லது இருவரும் இணைந்து இதர இடங்களில் இருந்தாலும் தோஷம் உண்டாகிறது. எட்டில் செவ்வாய் அமைவதும் திருமணம் பற்றிய எதிர்ப்பார்ப்புகளில் தோஷத்தினை ஏற்படுத்துகிறது.

ஏழுக்குடையவர் எட்டில் அமர்வது அல்லது 7–8 அதிபதிகள் இணைந்து இருப்பதும் தார தோஷம் ஆகும். வக்கிரம் பெற்ற கிரகங்கள் ஏழில் நிற்பதும் தோஷத்தினை உண்டாக்குகிறது.

### திருமணம் எப்போது நடக்கும்?

நடக்கும் தசா புத்தி காலங்களில் ஏழாம் அதிபதி தொடர்பு இருக்கிறது என்றால் அந்த காலகட்டத்தில் திருமணம் நடைபெறும்.



ஏழாம் அதிபதியை பார்க்கும் கிரகங்கள் தசா புத்தி காலங்களிலும் திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது.

ஏழில் நிற்கும் கிரகம் குரு பார்வை யில் இருந்தால் அந்த கிரக தசா புத்தி யில் திருமணம் உண்டாகும்.

கோச்சார குரு ராசிக்கு 2–7–9 ஆகிய வீடுகளில் நிற்கும் போது திருமணம் நடைபெற உதவி செய்கிறார்.




### வரப்போகிறவர் எப்படி ..?

**7ல் சூரியன்** இருந்தால் வரப் போகும் வாழ்க்கை துணை அதிகாரம் செய்பவராகவும், தலைமுடி யில் குறைபாடு உள்ளவராகவும், சற்றே உயரமானவராக இருப்பார். பதட்டமான, பரபரப்பு மிக்கவராக காணப்படுவார். கிழக்கு திக்கில் முக்கியஸ்தர்கள் வீட்டில் இருந்து வரன்/வது அமையும்.

**7ல் சந்திரன்** நிற்க அந்த ஜாதகருக்கு அழகான வாழ்க்கை துணை அமையும். வியாபாரம் செய்யும் வீட்டில் இருந்து, எளிதில் உணர்ச்சி வசப்படும் நபராக இருப்பார்.

**7ல் செவ்வாய்** அமர்ந்த நிலையில் சுறுசுறுப்பானவராகவும், வேகமாக செயல்படும தன்மை கொண்டவர் லைஃப் பார்ட்னராக வருவார். கோபம், அசட்டு தைரியம் இருக்கும்.

**7ல் புதன்** இருக்க மாமன் வழியில் வரன் அமைய வாய்ப்புள்ளது. புத்திசாலியான வாழ்க்கை துணை க்கு வாய்ப்பு உண்டு. பேச்சு திறன், தகவல் தொழில்நுட்ப திறமை உள்ளவர் வரலாம்.வட கிழக்கு திக்கில் இருந்து திருமண செய்தி வரும்

**7ல் வியாழன்** அமர நல்ல சிவந்த நிறம் கொண்ட பெண்/மாப்பிள்ளை அமையும். நல்ல கல்வி, ஆலோசனை வழங்கும் திறன் கொண்ட வாழ்க்கை துணை அமையும். கண்டிப்பானவர்

**7ல் சுக்கிரன்** அமைய, இளமை துள்ளல், ஜாலியான மனோபாவம் கொண்ட வாழ்க்கை துணை அமையும். கணவர் கலை ஆர்வம் மிக்கவராக இருப்பார்.

**7ல் சனி** இருந்தால் வரப் போகும் வாழ்க்கை துணை ஜாதகரை விட வயதான தோற்றம் கொண்டவராக இருப்பார்.கடின உழைப்பாளி, எளிய பின்னணி கொண்டவராக இருப்பார். மனசாட்சி படி நடப்பவர்.

**7ல் ராகு** நிற்கும் போது வாழ்க்கை துணை மிகவும் எச்சரிக்கை பேர்வழியாக இருப்பார். யாரையும் எளிதில் நம்ப மாட்டார், எதையும் சந்தேகிப்பார் அதனால் ஏமாற்ற முடியாது. வேறு கலாச்சார பண்பாட்டு தொடர்பு கொண்டவராக இருக்க வாய்ப்பு.

**7ல் கேது** நிற்பதால் வாழ்க்கை துணை சற்றே அமைதியான குணாதிசயங்கள் கொண்டவராக இருப்பார். உணர்ச்சிகளை அவ்வளவாக வெளிப்படுத்த மாட்டார்.எளிமையை கடைப்பிடிப்பவர், மனதிற்கு உள்ளேயே விசயங்களை அடக்கி வைப்பவர்.

இதுவரையில் திருமணம் சார்ந்த விசயத்தில் கிரகங்களின் செயல்பாட்டினை அறிந்து கொண்டிருப்போம். நடப்பதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இருக்கும் என்றால் எதுவும் பிரச்சினை இல்லை தான்.



இறைசிந்தனை மற்றும் குலதெய்வ வழிபாட்டை முறையாக மேற்கொண்டு வருபவர்களுக்கு தோஷங்கள் படிப்படியாக விலகி நல்லவைகள் நடைபெறும்.

மீண்டும் மற்றுமொரு தலைப்பில் சந்திப்போம்!

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர்



தொடர்புக்கு : 9894176494

# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com